


33ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 33 | பாலம்: 14 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2023

# கனடிய அமைச்சராக இலங்கைத் தமிழர்

2021 செப்ரெம்பரில் நடைபெற்ற கனடிய மத்திய அரசிற்கான தேர்தலில் வென்று சிறுபான்மை அரசாகப் பதவியேற்ற லிபரல் கட்சியின் தலைவரான கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தனது அமைச்சரவையில் பாரிய மாற்றத்தை 2023 ஜுலை 26இல் செய்திருந்தார். இம்முறை நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தில் 8 அமைச்சர்கள் மட்டுமே தமது அமைச்சுக்களை மாற்றாமல் தொடர்ந்தும் வைத்திருக்கின்றனர். ஏனைய 30 அமைச்சுப் பதவிகளும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கனடிய மத்திய அரசின் புதிய அமைச்சரவை ஜுலை 26ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றது. புதிய அமைச்சரவையிலும் பிரதமரைத் தவிர 38 அமைச்சர்கள் உள்ளனர். அவர்களிலும் 19 பெண்கள் 19 ஆண்கள். கனடியப் பிரதமர் முதற்தடவையாக 2015ஆம் ஆண்டில் பதவியேற்று அமைச்சரவையை அறிவித்ததில் இருந்து தொடர்ந்தும் தனது அமைச்சரவையில் 50% ஆண்கள், 50% பெண்களாக வைத்திருக்கிறார்.



தமது அமைச்சுப் பதவிகளை மாற்றாமல் வைத்திருந்த எண்மரும், துணைப் பிரதமரும் நிதி அமைச்சருமான Chrystia Freeland, தொழில்துறை அமைச்சரான Francois-Philippe Champagne, சுற்றுச் சூழல் அமைச்சரான Steven Guilbeault, பழங்குடிகளுக்கான சேவைகள் அமைச்சரான Patty Hajdu, பெண்கள் மற்றும் பாலின சமத்துவ அமைச்சரான Marci Ien, வடபகுதி விவகாரங்கள் அமைச்சரான Dan Vandal, வெளியுறவு அமைச்சரான Melani Joly மற்றும் மத்திய பொருளாதார மேம்பாட்டு நிறுவன அமைச்சரான Filomena Tassi ஆவர்.

இதுவரை அமைச்சர் பதவிகளை வகித்து வந்த ஏழுபேர் தமது அமைச்சர் பதவிகளை இழக்கின்றனர். இவர்களுக்குப் புதிய அமைச்சரவையில் இடம் ஒதுக்கப் படவில்லை. இவர்களில் நால்வர் அடுத்த முறை தேர்தலில் நிற்கப் போவதில்லை என ஏற்கனவே அறிவித்திருந்தனர். அவர்கள் நால்வரும் முன்னாள் பொதுச் சேவைகள் மற்றும் கொள்முதல் அமைச்சரான Helena Jaczek, முன்னாள் போக்குவரத்து அமைச்சரான Omar Alghabara, முன்னாள் மனநலம் மற்றும் போதை மருந்திற்கு அடிமையாதல் துறைக்குப் பொறுப்பான அமைச்சரான Carolyn Bennett மற்றும் முன்னாள் மீன்வளத் துறை அமைச்சரான Joyce Murrary ஆவர்.

பதவியை இழந்த ஏனைய மூன்று அமைச்சர்களும், முன்னாள் நீதி அமைச்சரான David Lametti, பொது பாதுகாப்பு அமைச்சரான Marco Mendicino மற்றும் திறைசேரி நிர்வாக சபைத் தலைவரான Mona Fortier ஆவர்.


அடுத்த முறை தேர்தலில் போட்டியிடாத படியால் புதுமுகங்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்க நால்வர் அமைச்சர் பதவிகளை இழந்தனர். ஆனால் மற்றைய மூவருடைய அமைச்சுப்பதவிகள் ஏன் அவர்களிடம் இருந்து எடுக்கப்பட்டது என்று ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், கனடியப் பிரதமர், "புதிய ஆற்றல்மிக்க திறமையான பல திறன்களைக் கொண்ட புதிய அணியை உருவாக்கும் நோக்குடன்தான் இந்த அமைச்சரவை மாற்றம் செய்யப் பட்டது" என்றார். அத்துடன் "கடந்த பல ஆண்டுகளாக இந்த நாட்டிற்கும் இந்த அமைச்சரவைக்கும் சிறப்பாகச் சேவை யாற்றிய அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்" எனவும் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையில் ஏழு லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முதற் தடவையாக அமைச்சர்களாகப் பதவி யேற்றனர்.

Scaborough - Rouge Park தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்தசங்கரி முடியரசு-பழங்குடியினர் உறவுகள் (Crown-Indigenous Relations) அமைச்சராகப் பதவியேற்றார். இவர் கனடிய மத்திய அரசின் அமைச்சரவையில் அமைச்சராகப் பதவி யேற்கும் முதலாவது இலங்கைத் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. ஹரி ஆனந்த சங்கரியிற்கு விளம்பரம் பத்திரிகை மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறது. இவர் 2015ஆம் ஆண்டில் இருந்தே லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்.

ஹரி ஆனந்தசங்கரி இதற்கு முன்னர் முடியரசு-பழங்குடியினர் உறவுகள் அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளராக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர் நீதி மற்றும் மரபுரிமை (Heritage) அமைச்சர்களுடனும் பணி யாற்றியுள்ளார். இலங்கையில் பிறந்து

தொடர்ச்சி 05 பக்கம்
















*Brand New Condo Project*

# THE GRAND

## AT UNIVERSAL CITY

Starting Low
$ 600K



1 Bed Room
to
3 Bed Room

- ⌘ Flexible deposit structure
- ⌘ #5000 Upon Signing
- ⌘ 2.5% Extended Deposit
- ⌘ Occupancy : November 2027
- ⌘ 1 Year Free maintenance fee.
- ⌘ 5 Appliances included
- ⌘ No Assignment Fee
- ⌘ Rental Possible during Occupancy
- ⌘ Development Charges capped.

**Please Call : Raja Mahendran 416-315-9397**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

- PURCHASE
- REFINANCE
- SELF EMPLOYED
- BAD CREDIT
- INVESTMENT PROPERTY
- RENEWAL

- MAJOR BANKS
- ALTERNATIVE LENDERS
- B LENDERS
- CREDIT UNIONS
- TRUST COMPANIES
- PRIVATE LENDERS

**416 704 1200**

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE


Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ஐரோப்பியர்களின் ஆதிக்கச் சின்னமான ஹம்மென்னீல் கோட்டை

**வல்வை.ந.அனந்தராஜ்**

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அருகில் உள்ள காரை நகருக்குத் தென்கிழக்கிலும், எழுவைதீவு, அனலைதீவு ஆகிய தீவுகளுக்கு வட கிழக்கிலும் அமைந்துள்ள தீவும் அதன் மேற்குப் பகுதியில் உள்ள துறைமுகம் சார்ந்த பகுதியும் ஊர்காவற்றுறை என அழைக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திற் கான கடல்வழிப் பாதையிலே காரைநகரும் ஊர்காவற்துறையும் அமைந்திருப்பதால் அவை புராதன காலத்தில் இருந்தே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக உள்ளன.



ஊர்காவற்றுறை என்பது இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தீவுகளுள் ஒன்றான, லைடன் தீவில் உள்ள ஒரு ஊராகும். லைடன் தீவானது, ஊர்காவற்றுறை, கரம்பன், சுருவில், புளியங்கூடல், நாரந்தனை, சரவணை, வேலணை, மண்கும்பான், மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பத்துக் கிராமங்களை உள்ளடக்கி யுள்ளது.

இங்கே ஒரு சிறிய துறைமுகமும் உண்டு. யாழ்ப்பாண அரசர்கள் ஆட்சி செய்த காலத்திலும், போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்திலும், இத்துறைமுகம் நாட்டின் வடபகுதியிலிருந்த முக்கிய துறை முகங்களில் ஒன்றாக விளங்கியது. ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்கள். வாணிப நடவடிக்கைகளிலும், போரியல் வரலாற்றிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தன இத்துறைமுகத்தின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வருமானமும் அரசாங்கத்திற்குக் கிடைத்து வந்தது.

இந்த நிலையில் ஸ்பெயினைச் சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் அடிகளார் இத்துறை முகத்திற்கு 16ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்காக வந்திறங்கினார். அதனைத் தொடர்ந்தே ஊர் காவற்றுறை மற்றும் அதனை அடுத்துள்ள தீவுகளில் கத்தோலிக்க மதம் பரம்பல் அடைந்தது.




ஊர்க்காவற்றுறையில் அமைந்துள்ள கடற் கோட்டை என அழைக்கப்படும் ஹம்மென்னீல் கோட்டை (Hammanheil Fort) இயற்கை அரண்களை உடைய, அழகிய தோற்றத்தைக் கொண்ட கோட்டையாகும்.

17ஆம் நூற்றாண்டுவரை தமிழ் அரசர் களின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த யாழ்ப்பாண இராட்சியத்தை கி.பி.1658இல் போர்த்துக்கேயர் கைப்பற்றியதும் யாழ்ப்பாண இராட்சியத்தின் பகுதிகள் முழுமையாக ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன. இதன்மூலம் ஊர் காவற்துறை துறைமுகமும் போர்த்துக் கேயரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதையடுத்து டச்சுமொழியில் கைற்ஸ் (KYTES) என்ற பெயரை ஊரகாவற்துறைக்குச் சூட்டினர்.

அவர்கள் தமது கடல் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு என்பவற்றிற்காக ஊர்காவற்றுறையின் துறைமுகத்திற்கு அண்மையில் நான்கு புறமும் கடலால் சூழப்பட்டுள்ள இடத்தில் ஒரு சிறிய கோட்டையை அமைத்து அதற்கு ஹம்மென்னீல் எனப் பெயரிட்டனர். இதுவே இன்று கடல்கோட்டை என அழைக்கப்படுகின்றது.

இக்கோட்டை கடலால் சூழப்பட்டு பலமான பாதுகாப்பு அரண்களைக் கொண்டிருப்ப தால், போர்க்காலத்தைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் கையகப் படுத்தப்பட்டு இன்றுவரை அவர்களா லேயே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையில் ஐரோப்பியர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட கோட்டைகளில் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திருக் கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, பூநகரி, மன்னார், ஆனையிறவு ஆகிய இடங்களில் அமைக் கப்பட்ட கோட்டைகளில் ஊர்காவற்துறை யில் உள்ள ஹம்மென்னீல் கோட்டை முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. அதற்குப் பிரதான காரணங்களாக, கடலின் மத்தியில் அமைந்துள்ள இக் கோட்டையின் அழகிய தோற்றமும் அது கொண்டுள்ள பாதுகாப்பு அரணுமாகும்.



ஊர்காவற்துறையில் போர்த்துக்கேயர்க ளால் கட்டப்பட்டுள்ள கடற்கோட்டை யானது காரைநகருக்கும், வேலணை தீவுக்கும் இடையில் மத்திய பகுதியில் உள்ள ஒடுங்கிய கடல் நிலப்பகுதி யிலுள்ள சிறிய மணற்திட்டு ஒன்றில் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஐரோப்பியர்களின் ஆதிக்கச் சின்னமாகக் காணப்படும் இக்கோட்டையானது 17ஆம் நூற்றாண்டில் அமிநால் டெமென்சில் என்ற போர்த்துக் கேயத் தளபதியால் கருங்கல், பாறை களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. பண்டைய காலம் தொட்டே இலங்கையின் வடக்கே பிரசித்தி பெற்ற துறைமுகமாக ஊர்காவற்றுறை திகழ்ந்துள்ளது.

கடல்வழிப் பயணம் செய்பவர்களுக்கு நுழைவுச்சீட்டு வழங்குதல், கப்பல் போக்கு வரத்தில் ஏற்படும் பிர்ச்சினைகளைத் தீர்த்துவைத்தல் போன்றவற்றிற்கான இடமாகவும் இக்கோட்டை பயன்படுத்தப் பட்டது. பின்னர் இலங்கையின் தொல்லியல் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்த இக்கோட்டையானது பிரித்தானியர்களின் ஆட்சியில் ஆயுள் தண்டனைக் கைதிகளைச் சிறைவைக்கும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டது.

# வந்த வழியின் நவநிதி

மலசலகூடத் தூய்மைத் தொழிலாளி தொடக்கம்
பேராசிரியர்கள், படைப்பாளிகள், அறிஞர்கள் முதலிய
பல தொழில் பொதுமக்களிடத்திலும்
அறிமுகம் சிநேகம் ஊடாட்டம் அன்புவழியாகவே
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
புறநானூற்றுப் புலவன் கணியன் பூங்குன்றன்,
காற்றின் வழிமீது நகரும் என்மனப் பாதங்கள்;



தமக்குத்தாமே தலையில் பல வடிவில்
கொம்புகள் செருகிய வண்ணம்
பிரபஞ்ச வெளியில் முகில்கள் அலைகின்ற
இந்தப் பெருங்காற்று மண்டலத்தில்,

குழந்தைத் தொழிலாளியாய் நான் வளர்ந்தேன்;.

எனது எட்டு வயதுக் காடு கடல் காலங்களிலேயே
- காத்திரமான இரண்டு முயற்சி _ செய்தேன்;


அதிகாலையில் வியர்வை சிந்தும் பிழைப்பு
பின்பு பாடசாலைக்கு ஓட்டம்
மாலை முழுவதும் பிழைப்பு
இரவில் ஆழ்ந்த தூக்கம்
மீண்டும் அதிகாலையில்;.
இதுவே மெலிந்த சிறுவனின் மணிக்கூடு;

தலை நிமிர்ந்ததும்
உதவியென்று வந்தோர்க்கு ஏணியானேன்
உறவுகள் நட்புகளுக்கும் ஓடமானேன்.

இயன்றளவு பெற்றுக்கொண்ட அழிவற்ற கல்வியின்
அடுக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து
உலகப்பயிருக்கும் ஊடக வாய்க்காலுக்கும்
பயனுள்ள அறிவு ஆறாக
வற்றாது சலசல ஓசையில் ஓடுகின்றேன்.

என்னை அரவணைப்போரைப் போற்றுகின்றேன்
என்னை ஒதுக்குவோரையும் வாழ்த்துகின்றேன்.

எமது இனிய உயிர் பிரியும்போது
உறவை நட்பை காணிநிலத்தை
புகழை பொருளை புத்தகத்தை
கையில் எடுத்துக்கொண்டா நாம்
பயணம் போகப்போகின்றோம்;.?



**முத்துராஜா**

33ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# கனடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

1983இல் தனது தாயாருடன் கனடாவிற்குப் புலம்பெயர்ந்த ஹரி ஒட்டாவாவில் உள்ள Carleton பல்கலைக் கழகத்திலும் ரொறொன்ரோவில் உள்ள Osgoode Hall சட்டக்கல்லூரியிலும் பட்டம் பெற்றுள்ளார்.

அதன்பின்னர் வணிகம், ஆதன முதலீடு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு சட்ட நிறுவனத்தை நிர்வகித்து வந்தார். மேலும் ஐக்கிய நாடுகள் சபையில், 'கனடிய சட்டத்தரணிகளின் உரிமைகள் கண்காணிப்பு' என்ற அமைப்பை (Lawyers' Rights Watch Canada)



பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார். அத்துடன் அவர் தமிழ் சமூக அமைப்புகளிலும் ஈடுபட்டு வந்தார்.

ரொறொன்ரோவில் உள்ள Parkdale - High Park தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான Arif Virani நீதி அமைச்சராகவும் மற்றும் முதன்மை சட்டத்தரணி (Attorney General) ஆகவும் பதவியேற்றார். இவர் 2015ஆம் ஆண்டில் இருந்தே லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். Arif Virani இதற்கு முன்னர் நீதி அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளராக இருந்தவர். 1972ஆம் ஆண்டில் உகண்டா-ஆசிய அகதியாகக் கனடாவிற்கு வந்த இஸ்மாயிலி முஸ்லீம் இனத்தவரான Arif, மொன்றியலில் உள்ள McGill பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளம் கலைமானிப்பட்டம் பெற்று ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றவர்.

Arif Virani 15 ஆண்டுகள் சட்டத்துறையில் பணியாற்றியவர். இவர் ஒன்ராறியோவில் மாகாண அரசின் அமைச்சில் அரசியலமைப்புச் சட்டத்தரணியாகவும் பணியாற்றியவர். இவர் ஒன்ராறியோவில் சட்ட சேவைகளை வழங்கி வந்தவர். இவர் ருவாண்டா இனப் படுகொலையை (Rwandan Genocide) விசாரிக்கும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் உதவி சட்டத்தரணியாகவும் பணியாற்றியவர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள Burnaby North - Seymour தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான Jerry Beech குடிமக்கள் சேவை அமைச்சராகப் பதவியேற்றார். இவர் 2015ஆம் ஆண்டில் இருந்தே லிபரல்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். Jerry Beech இதற்கு முன்னர் நிதி அமைச்சர், மீன்பிடித்துறை அமைச்சர் ஆகியோருக்கு நாடாளுமன்றச் செயலாளராக இருந்தவர். இவர் Capilano, Simon Fraser மற்றும் Oxford பல்கலைக்கழகங்களில் பயின்று வணிகம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் இளம்கலைமானி மற்றும் முதுகலைமானிப் பட்டங்கள் பெற்றவர்.

மொன்றியலில் உள்ள Hochelaga தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான Soraya Martinez Ferrada சுற்றுலாத்துறை அமைச்சராகவும் குவிபெக் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளராகவும் பதவியேற்றார். இவர் 2019ஆம் ஆண்டில் இருந்து லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். Soraya, இதற்கு முன்னர் வீட்டுவசதி, போக்குவரத்துத் துறை மற்றும் குடிவரவுத்துறை அமைச்சர்களுக்கு நாடாளுமன்றச் செயலாளராக இருந்தவர். இவர் 1980ஆம் ஆண்டு குடும்பத்துடன் சிலி (Chile) நாட்டில் இருந்து அரசியல் தஞ்சம் கோரி அகதியாகக் கனடாவிற்கு வந்தவர். Soraya மொன்றியல் பல்கலைக் கழகத்தின் வர்த்தகக் கல்லூரியான HEC மொன்றியலில் முகாமைத்துவத்தில் முதுகலைமானிப்பட்டம் பெற்றவர்.

ரொறொன்ரோவில் உள்ள York Centre தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக Ya'ara Saks மனநலம் மற்றும் போதை மருந்திற்கு அடிமையாதல் துறைக்குப் பொறுப்பான அமைச்சராகப் பதவியேற்றார். இவர் 2020ஆம் ஆண்டில் நடைபெற்ற இடைத்தேர்தலில் வென்று லிபரல்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக



இருந்து வருகிறார். ரொறொன்ரோவில் பிறந்த Ya'ara, கனடா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் இரட்டைக் குடியுரிமை உடையவர். மொன்றியலில் உள்ள McGill பல்கலைக்கழகத் தில் அரசியல் விஞ்ஞானத் தில் இளம்கலைமானிப் பட்டம் பெற்ற Ya'ara, ஜெருசலமில் உள்ள Hebrew பல்கலைக் கழகத்தில் சர்வதேச உறவுகள் மற்றும் இராஜதந்திரத்தில் முதுகலைமானிப்பட்டம் பெற்றவர். இவர் ஜெருசலம் நகரசபைத்தலைவர் அலுவலகத்தில் பணியாற்றியவர். அப்போது "இஸ்ரேல் - பாலஸ்தீனிய அமைதி செயல்முறையின்" ஒரு பகுதியான மக்கள் திட்டங்களில் பணியாற்றியவர்.

ஒட்டாவாவில் உள்ள Kanata - Carleton தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான Jenna Sudds குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் சமூக மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பதவியேற்றார். இவர் 2021ஆம் ஆண்டில் இருந்து லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். Jenna, இதற்கு முன்னர் பெண்கள் மற்றும் பாலின சமத்துவ அமைச்சருக்கு நாடாளுமன்றச் செயலாளராக இருந்தவர். St. Catharinesஇல் இருக்கும் Brock பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்துறையில் இளம்கலைமானிப் பட்டம் பெற்ற Jenna ஒட்டாவாவில் உள்ள Carleton பல்கலைக்கழகத்தில் முதுமானிப்பட்டம் பெற்றவர்.




Mississauga - Streetsville தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான Rechie Valdez சிறு வணிகத்துறை அமைச்சராகப் பதவியேற்றார். இவர் 2021ஆம் ஆண்டில் இருந்து லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். புதிதாகப் பதவியேற்ற ஏழு அமைச்சர்களில் இவர் மட்டும்தான் முதலில் ஒரு அமைச்சர்களுக்கும் நாடாளுமன்றச் செயலாளராகப் பதவி வகிக்காதவர். இவர் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களில் பங்கேற்றுப் பணியாற்றி வந்துள்ளார். Zambiaஇல் பிறந்து வளர்ந்த Rechie, 1989இல் கனடாவிற்கு குடும்பத்துடன் வந்து குடியேறினார். Rechie Valdez கனடிய மத்திய அரசில் அமைச்சர் பதவி பெறும் முதலாவது Filipina இனத்தவர் ஆவார். இவர் Fillipino TVஇல் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். ஒரு தொழிலதிபரான Rechie, வெதுப்பகம் ஒன்றிற்கு உரிமையாளர். அவர் பலவகையான வெதுப்பகப் பொருட்களை விநியோகம் செய்து வந்தார். இவர் Filipino Fusion வெதுப்பகப் பொருட்களை உருவாக்கியவர்.

தமது அமைச்சுப் பதவிகளை மாறாமல் வைத்திருந்த எண்மரும் மற்றும் புதிதாக அமைச்சுப் பதவியேற்ற ஏழுபேரையும் விட ஏனைய 23 அமைச்சர்களுக்கும் வெவ்வேறு அமைச்சுப்பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க சிலவற்றைப் பார்ப்போம்.

* பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த அனிதா ஆனந்த் தற்போது திறைசேரி நிர்வாகசபைத் தலைவராகப் பதவியேற்றுள்ளார். இப்பதவி பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டது அல்ல. ஆனால், இப்பதவி வகிப்பவரே எல்லா அமைச்சரவையிலும் அங்கீகரிக்கப் பட்ட கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த அரச திணைக்களங்களுக்குத் தேவையான நிதி வளங்கள் மற்றும் நிர்வாகச் சூழலை வழங்குவதன் மூலம் முழு அரசாங்கத்தினதும் நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்கிறார்.

* அவரசகால தயார்நிலைக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் Bill Blair தற்போது பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.




* குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சராக இருந்த Karina Gould தற்போது நாடாளுமன்றத்தில் அரச அவைத்தலைவராகப் பதவியேற்றுள்ளார்.

* சர்வதேச வளர்ச்சித்துறை அமைச்சராக இருந்த Harjit

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

## நாமும் நமது இல்லமும் 636

# நிர்மாணச் செலவு அதிகரிக்கின்றது!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் நிர்மாணச் செலவு தொடர்ச்சியாக அதிகரித்து வந்தது. கோவிட்-19இற்குப் பிற்பாடு மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக நிர்மாணத்துறை நிறுவனங்கள் ரொறொன்ரோ பெரும்பாகத்திற்கு மிகவும் தூர அளவில் கட்டிடங்களை நிர்மாணிக்கத் தொடங்கியுள்ளதனை இன்றைய தரவுகள் தெரியப்படுத்துகின்றன. ஏற்கனவே ரொறொன்ரோவிற்கு வெளியே (Area Code 905)இல் அடுக்கு மனைகள் நிர்மாணிப்பதனைக் காணலாம்.

உதாரணமாக, 2023ஆம் ஆண்டின் இரண்டாவது கால் ஆண்டில் 8,600 புதிய அடுக்குமனைகள் விற்பனைக்காக ஆயத்தப்படுத்தப்படுகின்றன. இதில் 63%ஆனவை 416இற்கு வெளியே 905இல் உள்ளன. அத்துடன் 37%இல் ஓர் அடுக்குமனைத் தொகுதியே ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் நிர்மாணிக்கப்பட இருக்கின்றது.

இதற்கு முக்கிய காரணம் அடுக்குமனையின் சதுர அடியின் விலையே.

ரொறொன்ரோவின் நடுப்பகுதியில் (Core Area) $1,700 சதுர அடி என்ற விலையே நியாயப்படுத்தக் கூடியதாகவும், ரொறொன்ரோவின் மத்திய பகுதிக்கு வெளியே 905இற்கு உள்ளே உள்ள ரொறொன்ரோ பகுதியில் சராசரிவிலை $1,400 சதுர அடி என்பது, இன்றைய விலையாகக் காணப்படுகின்றது. கார் தரிப்பு இடம் (Parking Space) மற்றும் பொருட்கள் சேமித்து வைக்கும் இடம் (Locker) ஆகியவற்றிற்கு மேலதிகமாக பணம் செலுத்திப் பெறவேண்டும்.

மில்ரன் (MILTON), ஹமில்ரன் (HAMILTON), கிச்சினர் (KITCHENER) போன்ற பகுதியில் கொண்டு வரப்படும் புதிய அடுக்குமனைகளின் சதுர அடி விலை $980 இலிருந்து $1,150வரை வேறுபடுகின்றது. இந்தக் காரணத்திற்காகவே நிர்மாண நிறுவனங்கள் நயகரா பெரும்பாகத்தில் (உதாரணம் FORT - ERIE) பகுதியில், பெரியளவிலான அலகுகளை (Big Size) 2 அறை கொண்டவற்றை சந்தைக்குக் கொண்டு வருகின்றன. இதன் சதுரஅடி விலை $850 அளவில் காணப்படுகின்றது.



இவ்வாறான மனை வாங்குபவர்கள் ரொறொன்ரோவிலிருந்து 1½ மணித்தியாலத்திற்கு அதிக தூரத்தில் வாங்க வேண்டியுள்ளது. $850 சதுர அடி என இருந்தாலும், இவ்வளவு தூரத்தில் கனடியர்கள் வாங்குவார்களா என்பது எதிர்காலத்தில்தான் தெரிய வரும்.

அண்மைய புள்ளிவிபரத்தின்படி, 56% கனடியர்கள் தாம் இருக்கும் பகுதியில் இருப்பதனையே விரும்புகின்றனர். எனினும், 44%ஆனோர் விலை காரணமாக ஒன்ராறியோவின் ஏனைய பகுதிகளிற்கு இடம் பெயர்வதில் எதுவித சிக்கல்களும் இல்லை என்பதனையும் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலத்தில் அதிகளவிலான புதியவர்கள் கனடாவிற்குள் வருவதும், அதில் 25-35%ஆனோர் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் குடிபுகுவதால் அதிகளவு புதிய மனைகள் மற்றும் வீடுகள் தேவை என்பது இயல்பானதே. குறிப்பாக, மிகக் குறுகிய காலத்தில் அமெரிக்காவிற்கூடாக அதிகளவிலான அரசியல் தஞ்சம் புகுபவர்களையும் காணலாம். அத்துடன் தொழில் அலுவலகத்திற்கு சென்றுதான் தொழில் புரிய வேண்டும் என்ற நிலைமை தவிர்க்கப்படுவதனால், ஒன்ராறியோவின் பல பகுதிகளிற்கும் மக்கள் செல்வது எதிர்காலத்தில் காணக்கூடியதாக இருக்கும். இதனால், ரொறொன்ரோ பெரும்பாகத்திலும் விலை அதிகரிப்பு ஏற்படுவது இயல்பாக காணப்படலாம். ஆனால் அதிகரிப்பு ரொறொன்ரோ மற்றும் ரொறொன்ரோ பெரும்பாகம் போல் காணப்படாது என்பதனை நினைவில் கொள்வது நல்லது. எனினும், ரொறொன்ரோவிலிருந்து 1 மணி பிரயாணம் என்பது இன்றைய காலத்தில் சாதாரணமாகவே

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



# தீர்மானங்கள் இன்றி முடிவடையும் கூட்டங்கள்

- விகிர்தன் -

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பல கூட்டங்கள், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்ற போதும், அவற்றில் எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்படுவதாக தெரியவில்லை.

தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடல், அனைத்துக் கட்சிக் கூட்டம் என தொடர்ந்து நடைபெற்றுவருகின்ற போதும் அவை எந்தவொரு தீர்மானமும் இன்றி முடிவடைவதைத்தான் அண்மைக் காலங்களில் காண்கின்றோம்.

இதன் தொடர்ச்சியாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அழைப்பு விடுக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டம் கடந்த 26ஆம் திகதி நடைபெற்று முடிவின்றி கலைந்தது. கூட்டம் நிறைவடையும் முன்னரே ஜனாதிபதி இடைநடுவே எழுந்து சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய நல்லிணக்கம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்தக் கூட்டத்தில் பங்கேற்றது. தமிழர் தரப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதில் கலந்து கொண்டது. வடக்கின் முன்னாள் முலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதில் கலந்து கொள்ளவில்லை அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த அனைத்துக்கட்சி கூட்டத்தை புறக்கணிப்பதாக முன்னரே அறிவித்திருந்தார்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் என்ன நடந்து என்பதை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பு ஒன்றில் வெளிப்படுத்தியிருந்தார்.

மாகாண சபை தேர்தலை நடத்தாமல் காலம் கடத்திக் கொண்டு, மாகாண சபை முறைமை பற்றிப் பேசுவது முறையற்றது என பலர் அக் கூட்டத்தில் சுட்டிக் காட்டிய



நிலையில், தான் தற்போது கொண்டு வந்திருக்கின்ற தனிநபர் சட்டமூலத்திற்கு அமைவாக மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என சுமந்திரன் தெரிவித்த போது தேர்தல் இப்போது தேவையில்லை அதிகாரப் பகிர்வு எப்படி இருக்க வேண்டும் என்று பேசுவோம் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

தேர்தலும் நடத்தப்பட வேண்டும் இதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே சொல்லி இருக்கின்றோம் என்று சொன்னபோது, நீங்கள் இந்த இரண்டிலே ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். ஒன்று தேர்தல் அல்லது அதிகாரங்கள் பகிர்வு. இரண்டையும் ஒரே நேரத்தில் கேட்க முடியாது என திட்டவட்டமாக ஜனாதிபதி கூறினாராம்.

இது ஒரு முரண்பட்ட கருத்து அல்ல. இரண்டும் ஒரே திசையில் தான் இருக்கிறது அப்படி இருக்கின்ற போது நீங்கள் ஏன் ஒன்றை மட்டும் தான் கேட்க வேண்டும் என சொல்கிறீர்கள்? என்று தான் ஜனாதிபதியோடு விவாதித்த போது சி.வி.விக்னேஸ்வரன் தேர்தல் தேவையில்லை அதிகாரப் பகிர்வு பற்றி பேசுவது தான் முக்கியம் என்று குறிப்பிட்டாராம்.

அந்தக் கருத்தோடு தாங்கள் உடன்படாததால் தமிழ் தேசிய கூட்டமைப்பாக மூன்று கட்சித் தலைவர்களும் அங்கே இருக்கின்றபோது அவர்களின் அனுமதியோடு விக்னேஸ்வரன் கூறியதை மறுத்துரைத்ததாகவும், பல வருடங்களாக நடத்தப்படாமலுள்ள மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும். தேர்தல் நடத்துவதால் அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக கதைக்கக் கூடாது என்று எங்கேயும் இல்லை, ஆகவே ஜனாதிபதி தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார் என சுமந்திரன் கூறியுள்ளார்.

நாங்கள் இரண்டையும் கேட்கின்றோம் என்று கூறியபோது, அப்படியானால் நாங்கள் கூட்டத்தை முடித்துக் கொள்வோம் என சொல்லிவிட்டு ஜனாதிபதி வெளியே சென்றுவிட்டாராம். ஆகவே அன்றைய கூட்டம் அரை குறையாகவே நடைபெற்றுள்ளது.

முன்னதாக, இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா சென்றிருந்தார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அப்போது இந்தியாவுடன் சில முக்கியமான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்திய தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே அதிகாரப் பகிர்வு குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டினார். இவ்வாறான விடயங்களைப் பற்றிப் பேசும்போது கருத்து மோதல்கள், விவாதங்கள் எழுவது சாதாரணமானதே. இதற்காக கூட்டத்தை நடத்திய ஜனாதிபதியே இடையில் கூட்டத்தை முறித்துக் கொண்டு வெளியேறுவது பொறுப்பான செயற்பாடு அல்ல.

அது மட்டுமன்றி, தமிழ் கட்சிகள் இவ்வாறான கலந்துரையாடல்களில் ஒரே கருத்து நிலைப்பாட்டில் நிற்க வேண்டும். பேச்சுவார்த்தை தொடர்பான ஒருமித்த நிலைப்பாட்டை எடுப்பதற்காக அவர்கள் முன்னரே ஒன்றுகூடி கதைக்க வேண்டும். இன்னும் அவ்வாறானதொரு கட்டத்திற்கு அவர்கள் வரவில்லை.

இந்நிலையில், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தமிழ் கட்சிகளை சந்தித்து கலந்துரையாடவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பில் தமிழ் கட்சிகளுக்கு இந்திய அரசாங்கத்தின் சில அறிவுறுத்தல்கள் இந்திய உயர்ஸ்தானிகர் ஊடாக வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கனடிய...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

Sajjan தற்போது அவசரகால தயார்நிலைக்குப் பொறுப்பான அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.



* முடியரசு-பழங்குடியினர் உறவுகள் அமைச்சராக இருந்த Marc Miller தற்போது குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சராகப் பதவி யேற்றுள்ளார்.

* சுகாதார அமைச்சராக இருந்த Jean-Yves Duclos தற்போது பொதுச் சேவைகள் மற்றும் கொள்முதல் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.


* கனடிய பாரம்பரியத்துறைக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் Pablo Rodriguez தற்போது போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

* தேசிய வருவாய்த்துறை அமைச்சராக இருந்த Diane Lebouthillier தற்போது மீன்வளம், பெருங்கடல் மற்றும் கனடிய கடலோர காவற்படை அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

* சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்த Randy Boissonnault தற்போது அதிகார பூர்வ மொழிகள் அமைச்சராகப் பதவி யேற்றுள்ளார்.

* தொழிலாளர் மற்றும் மூத்தோருக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் Kamal Khera தற்போது பன்முகத்தன்மை மற்றும் மாற்றுத்திறனாளிகள் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

* நாடாளுமன்றத்தில் அரச அவைத் தலைவராக இருந்த Mark Holland தற்போது சுகாதார அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.



சேர்ப்பது மிகவும் கடினம் செலவு செய்வது மிக எளிது.
பணம் மட்டும் அல்ல அடுத்தவர்
உள்ளத்தில் நாம் சேர்த்து வைக்கும் நல்லெண்ணமும் கூட...

# நானிலம் போற்றும் நட்பு - 26



- அகணி -
authorakani@gmail.com

"எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு." (அதிகாரம் பழமை, குறள் 806) என்ற குறளிற்கு "உரிமை வாழ்வின் எல்லையில் நின்றவர், தமக்கு அழிவு நேர்ந்தவிடத்திலும் பழைமையாய் உறவு கொண்டு நின்றவரின் தொடர்பைக் கைவிட மாட்டார்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நட்பிற்கு இலக்கணமானவர், பழைய நட்பில் உறுதியாக நின்றவரை, அவரால் துன்பம் வந்தபோதும் விட்டுவிட மாட்டார்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"நட்பில் நிலைத்து நின்றவர் பழைய சினேகத்தைக் கைவிடமாட்டார்." என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்."
"சிறந்த நண்பர் நட்பினை முறித்துக் கொள்ள மாட்டார்" என்ற அறிவுரையை இந்தக் குறள் தந்துள்ளது.

இப்போது கடந்த இதழில் உரையாடிய பிசிராந்தையார்-கோப்பெருஞ் சோழன் நட்புக் கதை பற்றி தொடர்ந்து உரையாடுவோம்.

கோப்பெருஞ்சோழன் தனது நண்பன் பிசிராந்தையார் பற்றி உயர்வாகத் தொடர்ந்து கூறுகிறான். இதனை புறநானூற்றில் வரும் அடுத்த பாடல் விளக்குகின்றது.

புறநானூறு 216, பாடியவர்: கோப்பெருஞ்சோழன், திணை: பாடாண்,
துறை: இயன் மொழி

"கேட்டல் மாத்திரை அல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டு பல கழிய,
வழு இன்று பழகிய கிழமையர் ஆயினும்,
அரிதே தோன்றல், அதற்பட ஒழுகல்" என்று
ஐயம் கொள்ளன்மின், ஆர் அறிவாளீர்!
இகழ்வு இலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ் கெட வரூஉம் பொய் வேண்டலனே
தன் பெயர் கிளக்கும் காலை "என் பெயர்
பேதைச் சோழன்" என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன், அதன்தலை
இன்னது ஓர் காலை நில்லலன்,
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கு இடமே."




இந்தப் பாடலின் விளக்கத்தினைக் கவனிப்போம். பிசிராந்தையருடன் தனது நட்பு பற்றி அறியாதிருந்த மக்களை நோக்கி கோப்பெருஞ்சோழன் கூறுகிறான். புறநானூற்றில் கோப்பெருஞ்சோழனே இந்தப் பாடலைப் பாடியுள்ளதாக உள்ளது.

"அறிவுடையவர்களே, உன்னைப் பற்றி அவன் கேட்டிருக்கின்றானே தவிரச் சிறிதும் கண்டதில்லை. பல ஆண்டுகள் செல்ல, தவறு இல்லாது நெருங்கிப் பழகியவர் என்றாலும், குற்றமில்லாத முறையில் ஒழுகுதல் அரிதே, தோன்றல்" என்று ஐயம் கொள்ளாதீர்கள்,

"என்னை இகழ்பவன் இல்லை அவன். அவன் இனியவன். மிக நெருங்கிய நட்பினையுடையவன். புகழை அழிக்கும் பொய்யை வேண்ட மாட்டான். தன்னுடைய பெயரைப் பிறர்க்குச் சொல்லும் பொழுது, "என்னுடைய பெயர் பேதமையுடைய சோழன்" என்று என் பெயரைக் கூறுவான். மிகுந்த அன்பு உரிமைக் கொண்டவன். அதற்குமேல், இந்த நிலையில் வராதிருக்க மாட்டான். இப்பொழுதே வருவான். அவனுக்கு ஓரிடம் ஒதுக்குங்கள்". இவ்வாறாக முழு நம்பிக்கையுடன் தனது நண்பன் பிசிராந்தையர் பற்றி கோப்பெருஞ்சோழன் கூறியதிலிருந்து அவர்களிற்கிடையில் காணப்பட்ட ஆழ்ந்த நட்பினைப் பற்றிப் புரிந்துகொள்ள முடிகின்றது.

கோப்பெருஞ்சோழன் கூறியவாறே பிசிராந்தையார் அங்கு வந்துவிட்டார். இதுபற்றி புறநானூற்றுப் பாடலில் காணலாம்.

புறநானூறு 217, பாடியவர்: பொத்தியார் _ பிசிராந்தையாரைப் பற்றியும் கோப்பெருஞ்சோழனைப் பற்றியும், திணை: பொதுவியல், துறை: கையறு நிலை

"நினைக்கும் காலை மருட்கை உடைத்தே,
எனைப் பெரும் சிறப்பினோடு ஈங்கு இது துணிதல்
அதனினும் மருட்கை உடைத்தே பிறன் நாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி,
இசை மரபு ஆக, நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்
"வருவன்" என்ற கோனது பெருமையும்,
அது பழுது இன்றி வந்தவன் அறிவும்,
வியத்தொறும் வியத்தொறும் வியப்பு இறந்தன்றே.
அதனால் தன் கோல் இயங்காத் தேயத்து உறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்று இசை
அன்னோனை இழந்த இவ் உலகம்,
என் ஆவது கொல்? அளியது தானே."

இப்பாடலுக்கான விளக்கத்தைக் கவனிப்போம்.

"கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருக்கத் துணிந்த பிசிராந்தையார் செயல் நினைக்கும்போது வியப்பாக உள்ளது. பிறன் நாட்டில் தோன்றிச் சிறப்புற்றிருக்கும் ஒருவனைப் போற்றி, அவன்மீதுள்ள நட்பு மட்டுமே துணையாக நிற்க, இப்படி வடக்கிருக்கும் காலத்தில் இங்கு வருதல் அதைக்காட்டிலும் வியப்பாக உள்ளது. பிசிராந்தையார் வருவார் என்று கூறினானே அந்தக் கோப்பெருஞ்சோழன் பெருமையும், அச்சொல் பழுதுபோகாமல் இங்கு வந்தானே புலவன் பிசிராந்தையார் இவனது அறிவும் நினைத்துப்பார்க்கும்போது வியப்பானது எல்லை கடந்து நிற்கிறது. தன் அரசுக்கோல் ஆட்சி இயங்காத தேசத்தில் வாழும் ஒருவனின் நெஞ்சில் இடம் பெற்றுள்ள சான்றோன் ஒருவனை இழந்துள்ள இந்த உலகம் இனி என்ன ஆகுமோ? இரக்கம் கொண்டு வருந்தத் தக்கதாக உள்ளது இந்த உலகின் நிலை."

இவர்களின் நட்பு கண்டு புலவர் வியந்து பாடுவதாக புறநானூற்றில் வரும் அடுத்த பாடல் உள்ளது.

புறநானூறு 218, பாடியவர்: கண்ணகனார், பாடப்பட்டோர்: பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன், திணை: பொதுவியல், துறை: கையறு நிலை

"பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய
மா மலை பயந்த காமரு மணியும்,
இடை படச் சேய ஆயினும், தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு, என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப,
சாலார் சாலார் பாலர் ஆகுபவே."

"பொன், பவளம், முத்து, நிலைபெற்ற பெரிய மலை தரும் விரும்பத்தக்க நீலமணி, ஆகியவை ஒன்றுக்கொன்று தொலைவான இடத்தில் தோன்றினாலும், பெருமதிப்புடைய நல்ல அணிகலன்களில் தொடுக்கும் பொழுது, ஒரே இடத்தில் சேர்ந்திருக்கின்றன. அதைப்போல், எப்பொழுதும் சான்றோர்கள் சான்றோருடன் சேர்வர். சான்றாண்மை இல்லாதவர்கள், சான்றாண்மை இல்லாதவர்களையே சேர்ந்திருப்பர்.

சான்றோர் சான்றோருடன் எளிதில் கலந்து பழகுவர் என்ற கருத்தையும் இந்தப் பாடல் விளக்குகிறது.

காவிரிக்குக் கரையமைத்தவன் கரிகாற்பெருவளத்தான். அவன் காலத்திற்குப் பின்பு சோழநாடு இரு கூறாகப் பிரிவடைந்து காணப்பட்டதாம். அதில் ஒன்று புகார் நகரினைத் தலைநகராகக் கொண்ட கடற்கரை நாடு. மற்றையது உறையூரைத் தலைநகராகக் கொண்ட உள்நாடு. கரிகாலனுக்குப் பின்பு உறையூர்ச் சோழரே சிறந்து விளங்கினர். உறையூரையாண்ட சோழர்களுள் கோப்பெருஞ்சோழனும் ஒருவன். அவன் நட்பு உலகத்திற்கே எடுத்துக்காட்டாய் விளங்கியவன்.

கோப்பெருஞ்சோழன் கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார், புல்லாற்றூர் எயிற்றியனார், பொத்தியார் போன்ற புலவர் பெருமக்கள் போற்ற வாழ்ந்தவன்.

அப்போது பாண்டிய நாட்டில், பிசிர் என்னும் ஊரில், ஆந்தையார் என்ற பெயருடைய புலவர் வாழ்ந்திருந்தார். அவர் பிசிராந்தையார் எனவழைக்கப்பட்டார். அவர் வீடு, மனைமாட்சியிற் சிறந்த மனையாளையும், அறிவுடைய மக்களையும், குறிப்பறிந்து கடனாற்றும் ஏவலர்களையும் பெற்றுள்ளமையாலும், கவலையற்று வாழ்ந்து கொண்டிருந்த காரணத்தால், ஆண்டு பல கடந்தும் அவர் நரை திரை பெறா நல்லுடல் பெற்றிருந்தார். இத்தகைய பெருவாழ்வு பெற்றிருந்த பிசிராந்தையார் மீது கோப்பெருஞ் சோழன் பேரன்பு கொண்டான். அவரைத் தன் ஆருயிர் நண்பராகக் கொண்டு போற்றினான்.

கோப்பெருஞ் சோழனைப் போன்றே, பிசிராந்தையாரும் அவன் புகழ் பாடுவதையே தம் தொழிலாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் மாலைக் காலத்தே, தம் மனையகத்தே இருந்து வெளியைப் பார்த்திருந்த போது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பறந்து செல்லும் அன்னப் பறவைகளைக் கண்டு, "குமரியாற்று மீன் உண்டு இமயம் நோக்கிச் செல்லும் அன்னப் பறவைகளே! செல்லும் வழியில், இடையே சோழநாடு என்ற நாடொன்றுள்ளது அதன் தலைநகர் உறையூர்க் கண், என் உயிர் நண்பன் கோப்பெருஞ் சோழன் உள்ளான். அவ்வூர் சென்று, அங்குள்ள அரசன் கோயிலுள், எவரையும் கேளாமல் புகுந்து, அரசனைக் கண்டு,
யாம் ஆந்தையாரை அறிவோம் அவர்பால் மாறா

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

# தமிழ் சினிமாவில் கதாசிரியர்களுக்கு மரியாதை இல்லை!

**நேர்காணல்: திரைப்பட இயக்குநர் வி. ஜெயபிரகாஷ் நேர்கண்டவர்: கண்ணன்**

திரைப்பட நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர், பாரதிராஜாவின் இணை இயக்குநர், பாக்யராஜின் கதை விவாதக் குழுவில் முக்கிய இடம்பெற்றிருந்தவர், ஏ.ஆர். ரஹ்மானின் நண்பர், டிஜிட்டல் திரைப்படப் பள்ளி முதல்வர், முனைவர், பல திரைப்படக் கல்லூரிகளில் கௌரவப் பேராசிரியர், ஊடகர் என பல பன்முகம் கொண்டவர், வி. ஜெயப்பிரகாஷ். 'சாதி சனம்', 'குச்சி ஐஸ்', 'உலகம்மை' உட்பட பல படங்கள் இயக்கியவர். 'விளம்பரம்' இதழுக்காக ஜெயப்பிரகாஷை சந்தித்தோம்.

**வெகுமக்கள் திரைப்படத்தின் வெற்றிகரமான திரைக்கதை என்றால் தமிழ் சினிமாவில் இன்றும் உதாரணமாக பேசப்படு பவர் பாக்யராஜ்தான். அவரது கதை விவாதக் குழுவில் நீங்கள் இருந்திருக்கிறீர் கள். திரைக்கதை உருவாக்கத்தில் பாக்யராஜ் பாணி என்ன?**

ஒரு சினிமாவின் அடிப்படை பலம் என்பது கதைதான். இப்போதெல்லாம் பல இயக்குநர்கள் அதற்கு மெனக்கெடுவதே இல்லை. அதுதான் இன்று தமிழ் சினிமாவில் பலவீனமாகவும் இருக்கிறது. நான் பாக்யராஜுடன் இருந்த காலகட்டம் தமிழ் சினிமாவில் கதை இலாகா என்ற துறை முக்கியமானதாக இருந்த நேரம். அப்போதெல்லாம் ஒரு சினிமா கதைக் கான விவாதம் என்பது ஒரு வருடம்கூட




நடைபெறும். 10 _ 15 பேர் அந்த விவாதத்தில் உட்காருவாங்க. ஒரு சிறிய மாநாடு மாதிரி இருக்கும் அந்த கூட்டம். ஒரு கதையை கொஞ்சம் கொஞ்சமாக உருவாக்கி, அதை பல கோணங்களில் அனுகி செப்பனிட்டு என்று மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்வாங்க. அதன் காரணமாத்தான் 100 நாள், 200 நாள், 300 நாட்கள் என்றெல்லாம் அப்போது படங்கள் ஓடியது.

இதில் பாக்யராஜ் சிறப்பு என்பது பாமரர்களுக்கு மிக நெருக்கமான கதைகளைத்தான் அவர் தேர்வு செய்வார். அதன்பிறகு அதை எவ்வளவு எளிமையாக சொல்ல முடியும் என்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார். கதையில் பார்வையாளர்களுக்கு ஒரு சந்தேகம் வருகிறது என்றால், ஒரு 'லாஜிக் பாயிண்ட்' இடிக்கிறது என்றால், அதை படத்தில் ஒரு கதாபாத்திரம் கேட்பது போல வைத்து, படத்திலேயே அதற்கு பதிலும் சொல்லிவிடுவார். அதனால் படம் பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்கள், அந்த சந்தேகம் வரும்போது, அட நாம நினைத்ததை இவர் பேசிவிட்டாரே என்று படத்துடன் நெருக்கமாகிவிடுவர். அதுபோல் அவர் படங்களில் இடைவேளை மிக முக்கிய திருப்பத்துடன் இருக்கும். இடைவேளையில் அரங்கை விட்டு வேளியே வரும் பார்வையாளர்கள், இனி என்ன நடக்கும் என ஆவலுடன் பேசிக்கொண்டிருப்பார்கள். அந்தளவு மக்களின் 'நாடித் துடிப்பு' தெரிந்தவர் பாக்யராஜ்.

முதலில் பாக்யராஜின் 'பாக்யா' பத்திரிகையில் பத்திரிகையாளராகத்தான் பணியில் சேர்ந்தேன். ஆனால் பத்திரிகை பணி என்பதுடன் தேங்கிவிடாமல், அவரது கதை விவாதம், திரைப்பட உருவாக்கம், அரசியல் பணிகள் என எல்லாவற்றிலுமே ஈடுபட்டிருந்தேன். எனக்கு நடிப்பிலும் ஆர்வம் உண்டு என்பதைத் தெரிந்து

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

VENI CANADIAN IMMIGRATION SERVICES
UTHAYAVENI THURAIRAJA
416-587-6971
2425 Eglinton Ave. East, Suite 211, Toronto, Ontario M1K 5G8, Canada
email: immigrationconsultant.veni@yahoo.ca
web: www.veni.ca
Licenced & Regulated Canadian immigration consultant



- Family Class Sponsorship
- Spousal Sponsorship
- Parent and Grandparent Super Visa Application
- Visitors Visa – Invitation Statutory Declarations
- Student/Visitor/Worker – Temporary Resident Visa
- Canadian Citizenship Application
- Work Permit Application with job offers
- Canadian Experience Class
- Skilled worker applications and Employers hiring foreign workers
- Permanent Resident Card Renewal
- Business applications Investor/ Entrepreneur/Self employed
- Removal Order Hearings
- Provincial Nominee Program
- Humanitarian and Compassionate Application and PRRA
- Refugee Claim

# தமிழ் சினிமா...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்ட பாக்யராஜ், 'ஆராரோ ஆரிரரோ' படத்தில் என்னை ஒரு நடிகராக அறிமுகப் படுத்தினார். அவருக்கு அடுத்த இடத்தை எனக்குக் கொடுத்திருந்தார்.

**வெளிவர இருக்கும் உங்கள் 'உலகம்மை' படம் எப்படி வந்திருக்கு?**

'ஒரு கோட்டுக்கு வெளியே' என்ற எழுத்தாளர் சு. சமுத்திரத்தின் நாவல் கதையை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த படத்தை எடுத்துள்ளேன். இப்போது கொழுந்துவிட்டு எரியும் சாதிய பிரச்சினையை ஒரு கிராமத்தின் பின்புலத்தில் இந்த நாவல் பேசுகிறது. படம் நன்றாக வந்திருக்கிறது. இளையராஜா இசை இந்தப் படத்துக்கு மிகப்பெரிய பலம்.

**இளையராஜாவுடன் பணியாற்றிய அனுபவம் எப்படியிருந்தது?**

பாக்யராஜுக்கு அப்புறம் பாரதிராஜாவிடம் 'புது நெல்லு புது நாத்து' படத்தில் உதவி இயக்குநராக சேர்ந்தேன். 'நாடோடித் தென்றல்', 'கருத்தம்மா', 'கிழக்குச் சீமையிலே', குஷ்பு நடித்த 'கேப்டன் மகள்', படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றினேன். பாரதிராஜாவுடன் இருந்த ஐந்து ஆண்டுகளிலும் சினிமா குறித்த பரந்துபட்ட அனுபவம் எனக்குக் கிடைத்தது.

பாரதிராஜாவுடன் இருந்த காலங்களில் தான் இளையராஜாவுடன் அறிமுகம். 'புது நெல்லு புது நாத்து', 'நாடோடி தென்றல்' இந்த இரண்டு படங்களுக்கும் இசை இளையராஜாதான். அப்போது ஓர் இணை இயக்குநராகத் தூரத்தில் இருந்து அவர் இசையமைப்பதை பார்த்துள்ளேன். இப்போது நெருக்கமாக பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.



எப்போதும் இளையராஜாவிடம் இசைக்காக சென்றால், முதலில் நீங்கள் படத்தை எடுத்துக்கொண்டு வாருங்கள். அதைப் பார்த்துவிட்டு அதற்கு நான் தேவைப் பட்டால் செய்கிறேன் என்பார். அது ஒரு நுழைவுத் தேர்வு மாதிரி. எனக்கும் அதைத்தான் சொன்னார். அதன்படி படத்தை எடுத்து முடித்ததும் அவருக்கு போட்டு காட்டினேன். முழுவதும் பார்த்தார். முடிந்த பின்னர், செய்வதா வேண்டாமா என்று விவாதம் நடக்கும் என்று எதிர் பார்த்துத் தயாராகக் காத்திருந்தேன். ஆனால், படம் பார்த்துவிட்டு வெளியே வந்ததும், "நாளைக்கு வேலையை ஆரம் பிச்சிருவோம்" என்றுவிட்டு போய்ட்டார். அவர் உடனே அங்கீகரித்ததே எனக்கு முதல் விருது மாதிரி இருந்தது.

இந்த படத்துக்காக 12 நாட்கள் அவர் பின்னணி இசை அமைத்தார். அவர் இசையை சேர்த்த பிறகு படத்தை பார்த்த எனக்கு, உயிரற்ற பொருளுக்கு உயிர் கொடுத்த மாய நிகழ்வு மாதிரி இருந்தது. 'உலகம்மை' இளையராஜா இசையமைக்கும் 1415ஆவது படம். ஆனாலும், முதல் படம் மாதிரி அவ்வளவு சிரத்தையுடன் செய்தார். இந்த தொழில் மேல் அவருக்கு தீவிரமான ஒரு பக்தி இருக்கிறது. தினமும் காலையில் 7 மணிக்கு ஸ்டுடியோவுக்குள் அவர் கார் நுழைந்துவிடுகிறது. 9 மணிக்கு நாம் போகும்போது பாதி வேலையை முடித்திருப்பார். அவர் காலை உணவுக்குப் போகும்போது, "இதெல்லாம் செய்திருக்கிறேன். போய் பாருங்க" என்பார். போய் என்ன நடந்துள்ளது என்று பார்த்தால் மெய் மறந்து போய்விடுவோம்.

பாடல்கள் காட்சி பற்றி நாம் விளக்கி முடித்ததும் உடனே அந்தப் பாட்டுக்கான பல்லவியை அவரே சொல்லி விடுகிறார். அதற்கு பின்னர்தான் கவிஞர்களை அழைத்து இந்த கருத்து பாடல் எழுத வேண்டும் என்கிறார். பாடலாசிரியர்களிடம் அவர் விளக்கி சொல்வதைப் பார்த்தால் இயக்குநர்களே ஆச்சரியமாவார்கள்.

**பாரதிராஜாவிடம் ஐந்து படங்கள் இணை இயக்குநராகப் பணியாற்றியிருக்கிறீர்கள். அந்த அனுபவம் எப்படியிருந்தது?**

தமிழ் சினிமா சரித்திரத்தில் பாரதிராஜா ஒரு சகாப்தம். இயக்குநர் இமயம் என்ற அடைமொழிக்கு மிகப் பொறுத்தமானவர். புதிய நடிகர்களை, மணல் போல் இருப்பவர்களை, மிகச் சிறந்த நடிகர்களாக, சிற்பமாக மாற்றும் மாயக்காரர் அவர். நெப்போலியன், சுகன்யா, ரஞ்சிதா என நான் அவருடன் இருந்த காலத்தில் புதியவர்களாக வந்து அவரால் சிறந்த நடிகர்களாக ஆனவர்களை பக்கத்தில் இருந்து பார்த்து பிரமித்திருக்கிறேன். பாரதிராஜாவே நடிப்பதற்காக வந்தவர் தான். எனவே, படப்பிடிப்பு தளத்தில் அவர் நடிப்பு சொல்லிக் கொடுப்பதை சரியாக உள்வாங்கிக் கொண்டாலே யாரும் நடிகராகிவிட முடியும்.

பாரதிராஜாவிடம் பணிபுரிந்த ஐந்து ஆண்டுகளும் திரைத்துறை குறித்த பரந்துபட்ட அனுபவம் எனக்குக் கிடைத்தது. தேசிய விருது பெற்றக் கலை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தியை 'நாடோடித் தென்றல்' படத்துக்கு அமர்த்தும்படி நான் தான் பாரதிராஜாவிடம் அழைத்துச் சென்றேன். எழுத்தாளர் சுஜாதாவை பாரதி ராஜாவுடன் இணைத்ததும் நான் தான். இதையெல்லாம் இப்போதும் மேடைகளில் சொல்லி என்னை பாராட்டுவார்.

**தமிழ் திரையுலகில் இளையராஜா _ பாரதிராஜா நட்பு மிகப் பிரபலமானது. இதில் இடையில் ஒரு விரிசல் ஏற்பட்டது. 'நாடோடி தென்றல்' படத்துக்குப் பிறகு**

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



# நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அன்புடையோம்! என்று கூறின், அவன்தம் மனைவியர் அணியத்தக்க அழகிய அணி பல அணிவித்து அனுப்புவன். அத்துணை அன்புடை யானைக் கண்டு செல்வீரோ?" என்று கூறிய கூற்று, பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன் மீது கொண்டிருந்த நட்பின் பெருமையினை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறாக நட்பு பற்றிய கருத்துகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இந்த இதழிலும் திருக்குறளில் நட்பு பற்றிய அறிவுரைகளையும், நட்பு பற்றிய பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் உண்மைக் கதை பற்றியும் ஆராய்ந்தோம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நட்பு பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

# நிர்மாணச்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

காணப்படுகின்றது.

1968ஆம் ஆண்டில் சராசரி வீட்டு விலை $24,000ஆகக் காணப்பட்டதாகவும், இதே விலை இன்று $1,190,000 ($1.19 மில்லியன்) ஆகவும் காணப்படுகின்றது.

இன்றைய விலை அதிகரிப்பு, ஆதன முதலீட்டாளர்களை தள்ளியே வைத்துள்ளது. தாம் வாழ்வதற்காகவும் அல்லது வாழ்வில் ஆதனம் வாங்க வேண்டும் என்பவர்களும், தமது இருக்கும் ஆதனத்தை விற்று புதிதாக வாங்க விரும்புபவர்களையும் ஆதனச் சந்தையில் காணக்கூடியதாக உள்ளது.

புதிதாகக் கொண்டுவரப்படும் அடுக்கு மனை விற்பனை நிறுவனங்கள், விலை குறைப்பது என்பது நிகழாத செயல். ஆனால், வாடிக்கையாளர்களை ஈர்க்க வேண்டும் என்பதால் புதிய, புதிய சலுகைகளை தொடர்ச்சியாக எதிர் பார்க்கலாம். இன்றைய நிலை இதுவே.

# தமிழ் சினிமா...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

**இளையராஜாவிடம் இருந்து பாரதிராஜா விலகியதற்கு என்ன காரணம்?**

பொதுவாகவே கலைஞர்கள் உணர்ச்சி வசமானவர்கள் தான். அதுவும் பாரதி ராஜா, இளையராஜா பற்றி சொல்லவே வேண்டியதில்லை. இருவருமே 'வெரி சென்சிட்டி' மனிதர்கள். எதற்கு கோபப்படுவார்கள் என்றே தெரியாது. அவ்வளவு கோபம் மேலோங்கி இருக்கும் மனிதர்களும்கூட. இருவருக்கும் இடையே அவ்வப்போது சின்னச் சின்ன சண்டைகள் நடப்பது இயல்புதான். அது விரைவிலேயே சரியாகிவிடும். ஆனால், 'நாடோடித் தென்றல்' படத்துக்குப் பிறகு அது நடக்க வில்லை. சிறு மனஸ்தாபத்தில் பிரிந்தவர் கள்; 'நாடோடி தென்றல்' படத்துக்கு அடுத்து வந்த, குஷ்பு நடித்த 'கேப்டன் மகள்' படத்திற்கு அம்சலேகா, அதை யடுத்து வந்த 'கிழக்கு சீமையிலே', 'கருத்தம்மா' படங்களுக்கு ஏ.ஆர். ரஹ்மான் என நீண்டுவிட்டது. ஆனால், அந்தப் பிரிவு தற்காலிகமானதுதான். அதன்பின்னர் இருவரும் இணைந்து, இன்றுவரை இணை பிரியாத நண்பர்களாக இருப்பது காலம் அறிந்த உண்மை.

**பாரதிராஜாவின் 'கிழக்கு சீமையிலே' படத்தில் ஏ.ஆர். ரஹ்மான் எப்படி இணைந்தார்?**

பாரதிராஜாவுடன் நான் பணியாற்றிக் கொண்டு இருந்த காலம், ஏ.ஆர். ரஹ்மான் அப்போது படங்களுக்கு இசையமைக்க தொடங்கியிருக்கவில்லை. அப்போது அவர் திலீப்; சிறு சிறு விளம்பரப் படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருந்தார். அக்காலத்தில் அவருடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. இந்நிலையில், 1992இல் மணிரத்னத்தின் 'ரோஜா' படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. ஏ.ஆர். ரஹ்மான் பாடல்கள் பட்டி தொட்டி எங்கும் ஒலிக்கத் தொடங்கியது.

இதனிடையேதான் 'நாடோடி தென்றல்' படத்துக்கு பின்னர் பாரதிராஜா – இளையராஜா நட்பில் விரிசல் ஏற்பட்டது. 'நாடோடி தென்றல்' படத்துக்கு அடுத்து 'கேப்டன் மகள்', அம்சலேகா இசையமைத்தார். அடுத்த படம் 'கிழக்கு சீமையிலே'. அப்போது ஏ.ஆர். ரஹ்மான் பிரபலமாகி இருந்தார். எனவே, அவரை ஒப்பந்தம் செய்யலாம் என்று பேச்சு வந்தது. ஆனால், 'கிழக்கு சீமையிலே' கிராமிய கதை. கிராமத்து இசை ஏ.ஆர். ரஹ்மானுக்கு வருமா என்பது அப்போது மிகப்பெரிய கேள்வி. அந்த கேள்வியை 'கிழக்கு சீமையிலே' படத்தில்தான் முதன் முதலில் அவர் உடைத்தார். அடுத்து 'கருத்தம்மா' செய்தார். அதில் அவருக்கு இந்திய ஒன்றிய அரசின் தேசிய விருதும் கிடைத்தது.

**தமிழ் திரையுலகின் பெரும் இசைக் கலைஞர்களான இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் இருவருடனும் நீங்கள் பணியாற்றியுள்ளீர்கள். இருவருக்கும் என்ன வித்தியாசத்தை உணர்ந்தீர்கள்?**

இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் இருவரது வேலை செய்யும் முறை முழுக்க வேறானது. இளையராஜா காலையில் ஏழு மணிக்கு வேலையைத் தொடங்குவார். ஏ.ஆர். ரஹ்மான் இரவு முழுவதும் வேலை செய்துவிட்டு அப்போதுதான் தூங்க செல்வார்.

**தமிழ் சினிமாவில் மட்டுமல்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, ஒரியா ஆகிய மொழிகளிலும் பணியாற்றியுள்ளீர்கள். தமிழ் திரையுலகுடன் ஒப்பிட அங்கே நிலைமை எப்படியிருக்கிறது?**

பாரதிராஜாவின் ஆசீர்வாதத்துடன் அவரிடம் இருந்து வெளியே வந்ததும் 'சாதி சனம்' படத்தை எடுத்தேன். 1997இல் வெளியான அந்த என் முதல் படம் தமிழ்நாடு மாநில அரசின் வரி விலக்கையும், சிறந்த படத்துக்கான விருதையும் பெற்றது. 'மண் வாசனை' படத்துக்குப்பின் வரி விலக்கு பெற்ற படம் அதுதான். 50 நாட்கள் ஓடி வெற்றிபெற்றது.

'சாதி சனம்' படத்துக்குப் பின், தெலுங்கு சினிமாவின் பாரம்பரியம்மிக்க படத் தயாரிப்பு நிறுவனமான உஷா கிரண் மூவீஸின் அழைப்பை ஏற்று அதன் கதைப் பிரிவில் நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தேன். அங்கிருந்து கன்னடம், மலையாளம், இந்தி, ஒரியா ஆகிய



மொழிகளில் தலா ஒரு படத்துக்கு கதை, திரைக்கதை பங்களிப்பு செய்தேன். எல்லா படங்களும் வெற்றி என்பதுதான் இதில் சிறப்பு.

இப்படி, நாடு முழுவதும் சுற்றியதில் இந்தியா வெகுஜன சினிமாவின் குறுக்கு வெட்டை முழுமையாக உள்வாங்கிக் கொள்ள முடிந்தது. இந்தக் கால இடைவெளியில் சினிமா டிஜிட்டல் தொழில் நுட்பத்துக்கு மாறியிருந்தது. தொழில்நுட்பம் என்று பார்த்தால் தமிழ் திரையுலகம் நன்றாக முன்னேறியிருக் கிறது. ஆனால், கதை, திரைக்கதையில் நாம் பின்தங்கிதான் இருக்கிறோம். தமிழ் சினிமாவில் கதாசிரியர்களுக்கு மரியாதை கிடையாது. ஆனால், அந்த மொழிகளிலும் கதாசிரியர், திரைக்கதை ஆசிரியர்களை மதிப்பும் மரியாதையுட னும் அணுகுகிறார்கள்.


## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!


# அறிவோம்!



பச்சைப் பயறை வாங்கி வந்து அதனை இரவில் தண்ணீரில் ஊற வைத்து காலையில் தண்ணீரை வடித்து விட்டு விடுங்கள். சுமார் 4 மணி நேரம் கழித்து பயறு முளை வந்திருக்கும்.

இதனைத்தான் முளை கட்டிய பயறு என்கிறோம். பொதுவாக பயறுக்கும், முளை கட்டிய பயறுக்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. என்னவென்றால், அதில் உள்ள சத்துக்கள்தான். எந்தத் தானியத்தையும் முளை வந்த பிறகு உண்பது உடலுக்கு அதிக சக்தியைக் கொடுக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. அதில் மிக முக்கிய இடம் வகிப்பது பயறுதான்.

100 கிராம் முளை கட்டிய பயறில், 30 கலோரிகள்
3 கிராம் புரதச்சத்து 6 கிராம் கார்போஹைட்ரேட்
2 கிராம் நார்ச்சத்து உள்ளது.

அதிக உடல் உழைப்பும், உடல் பலமும் தேவைப்படுவோர் இந்த முளை கட்டிய பயறை உணவில் எடுத்துக் கொள்ளலாம். இது உடலுக்கு குளுமையைக் கொடுப்பதால் கோடை காலத்தில் குழந்தைகளுக்கும் செய்து கொடுக்கலாம்.

- வேணி -


MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
• Advanced function
• Calculus & vectors
• Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr. S.F. Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance & Sep. laundry. Close to TTC & Eraa Supermarket. Avail. immediately.
**647.868.5871/416.292.5871**

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. Immediately
தொடர்புகளுக்கு: **416.898.1242**

**MCCOWAN & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. September 01, 2023.
**416.556.6003/647.631.8349**

**BELLAMY & ELLESMERE**
2 bedroom + den walk-out bsmt for rent. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.648.1673**

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom in bsmt for rent. Sep. entrance. Sep.washroom and kitchen.Close to all facilities. Avail. immediately.
**தொடர்புகளுக்கு: 647.846.9060**

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Parking Close to all facilities. Avail. immediately.
**தொடர்புகளுக்கு: 416.802.2827**

**KENNEDY & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities.
**416.904.9781 / 647.909.3063**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. Entrance.1 Washroom, parking. Close to school, etc. Available August 01 2023.
**தொடர்புகளுக்கு: 647.296.7932**

**TAUNTON & WESTNEY**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry & new appliances. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.657.7191**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.616.7840**

**MARKHAM & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
Master bedroom with washroom for rent in a house. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.532.6841**

**MORNINGSIDE & SHEPPARD**
Multiple bedrooms with washrooms for rent in a house. Student / working ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.802.8288**

**MARKHAM & STEELES**
1 Room for rent in upstairs. Utilities, cable & internet included. Single ladies preferred.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

**PORTUNION & SHEPPARD**
1 bedroom studio bsmt. No kitchen. Sep. entrance. Food service available. Close to all facilities. Avail. immediately.
**647.767.3262 / 647.808.1240**

**MORNINGSIDE & MCLEVIN**
1 bedroom for rent in a house. Parking & laundry. **பெண்கள் விரும்பத்தக்கது**. Avail. immediately.
**416.720.4472 / 416.875.1211**

**BRIMLEY & EGLINTON**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Working / students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**MCCOWAN & DENISON**
1 Room for rent in a 5 bedrooms house. **பெண்கள் விரும்பத்தக்கது.** 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**WARDEN & FINCH**
1 bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom for rent in a bsmt. Couple / ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. August 15, 2023.
தொடர்புகளுக்கு: **647.866.9837**

## BASEMENT FOR RENT

**VARCOE & KING ST. (HWY 2) OSHAWA**
1 bedroom bsmt for rent. Students /couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.4717**

## BASEMENT FOR RENT

**MARKHAM RD. & ELLESMERE RD.**
2 Bedroom Bsmt for rent. Sep. Entrance, Sep. laundry. 2 parking. Close to பாடசாலை, **college,** பல்கலைக்கழகம், வைத்தியசாலை, மற்றும் அனைத்து வசதிகளும் உண்டு. வீட்டு வாசலிலேயே 24/7 பஸ் வசதியும் உண்டு. Avail. immediately.
**647.885.6148 / 647.505.9919**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.

STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.
Contact: **647.686.8590**

## HOUSE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
3 bedroom House for rent. And 2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
**416.832.5381/647.855.8264**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt plus living room with Seperat entrance. School is near by & TTC is near by. Walmart and other Srilankan groceries also nearby.
Cell: ***416-857-4619*** Rajah

## BASEMENT FOR RENT

**HWY 401 & WESTNEY (AJAX)**
Brand new 2 bedroom bsmt for rent. Sep.entrance, parking & sep. laundry. Close to all facilities. No pets / No smoke. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.999.3878**

## BASEMENT FOR RENT

**STEELES & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Sep. laundry & parking. Close to TTC, School & all other facilities. No pets / no smoke. Avail. immediately
**416.728.2281 / 647.972.6250**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
**2 bedroom bsmt for rent in a 3 bedrooms bsmt. Sep. entrance, laundry & No parking. Senior Couple preferred. Rent $1500. Avail. immediately.**
**தொடர்புகளுக்கு: 416.830.3932**

## BASEMENT FOR RENT

**HWY 7 & 9TH LINE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all facilities. Avail. Sept. 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.771.7693**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent . Sep. entrance, kitchen, washroom, living room Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.7399**

மேலும் பக்கங்கள் 13,14,15

## CONDO. ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**

1 bedroom for rent in a 2 bedroom condo. Parking & internet. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.394.3535**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**

2 Rooms for rent in a house - upstaris. Ladies preferred. Close to all facilities. Avail. immediately.

**647.540.4618 /416.305.4773**

## ROOM FOR RENT

**PHARMACY & LAWRENCE**

1 Room for rent in a 3 bedroom bsmt. Student / Bachlor/couple preferred. Close to School & TTC, Grocery stores. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.708.3444**

## ROOM FOR RENT

**KINGSTON & SHEPPARD**

1 Room for rent in a house - upstaris. Working ladies preferred. Close to all facilities. Avail. Sept. 01, 2023.

தொடர்புகளுக்கு: **416.298.0134**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

2 Bedrooms for rent in a 3 bedrooms Condo. Single, students, working people preferred. No pets, No smoke & No alcohol. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.298.9718**

## ROOMS FOR RENT

1 Bedroom for rent - $900.
2 bedrooms for rent -$1,700.
3 bedrooms for rent - 2,500.

தொடர்புகளுக்கு:

**647.764.3697**

## HOUSE/ BASEMENT FOR RENT

**WARDEN & LAWRENCE**

3 Bedrooms newly renovated bunga low house for rent. **Also** 3 bedrooms bsmt for rent. Sep. entrance, sep.laundry & parking. Close to TTC & all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.569.0657**

## CONDO. FOR RENT

**HWY 401 & KENNEDY**

1 bedroom + Den, Morden & luxury Condo for rent. Super convenient location. $2500 per month. Avail. August 15, 2023.

**416.716.5946/416.809.9208**

## APTRTMENT FOR RENT

**MARKHAM & HWY 401**
**Tuxedo court**

1 bedroom for rent in a 2 bedroom Apt. Share kitchen, share washroom. No parking. Ladies preferred. Close to all facilities.

தொடர்புகளுக்கு: **416.830.3932**

## HOUSE FOR RENT

**MIDLAND & STEELES**

3 bedrooms bungalow house for rent. Close to school, TTC & all other facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.908.6810**

## HOUSE FOR RENT

**Brock Road & HWY 2 – Pickering**

3 Bedrooms & a den Town house for rent. Avail. Sept. 01, 2023. Spacious Kitchen, Living Room & Visitor Room. Close to all amenities. Rent $2,950.

**647.960.6427 or 416.671.0085**

## HOUSE FOR RENT

**CHURCH & ROSSLAND**

4 Bedroom Detached & 3 wash rooms. 3 parking, laundry. Close To Public Transportation, Shops, Parks, Trails & School bus routes.

தொடர்புகளுக்கு: **416.509.7247**

## காணி விற்பனை

திருகோணமலை **Alas Garden** இல் ***Lyca /Kentower*** பக்கத்தில், நடக்கும் தூரத்தில் கடற்கரை, புல்மோட்டை சாலையுடனும் மின்சார, குழாய்கிணறு வசதி கொண்ட 20 பேர்ச் உறுதிக்காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு**: 647–205–8317**

## வாடகைக்கு

4 BR, 3 BR,
2 BR, 1 BR
House, Condo,
Basement

**647-861-8240**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 31 வயதான (Master Graduated in Sosial Work - working at hospital) பெண் ஒருவருக்கு 31 - 36 வயதுள்ள செவ்வாய் தோசமுள்ள மணமகனைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **437.224.4754**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் திருமணமாகத 45 வயதான (Graduated with B.Com. Degree) ஆண் ஒருவருக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **437.545.9472**

## வாகனப் போக்குவரத்து

கட்டுநாயக்கா விமான நிலையம் - யாழ்ப்பாணம் - கொழும்பு மற்றும் குறுகிய நீண்ட தூர பிரயாணங்களிற்கு **FOR ALL YOUR TRAVEL NEED IN SRI LANKA** அழையுங்கள்

**647.447.8549/077.366.1703**

## COTTAGE FOR RENT

**SANDBANK BEACH**

Modern 5 bedroom furnished Cottage is available for short term / Long term rental. Includes unlimited Bell Fibe internet. Daily/ weekly/ monthly rental available.

Contact : **416.662.1529**

## BASEMENT FOR RENT

**SCAR. GOLFCLUB & BRIMORTON**

2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry, parking. Close to school, Centannial college & TTC. No smoking & no pets. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.622.0350**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & STAINES**

2 Rooms for rent. Ladies preferred.Close to all amenities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647. 888.9437**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen. தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## BASEMENTS & HOUSE FOR RENT

(1) **Ajax** Basement Available Salem & Taunton,1 bedroom, kitchen, 1 washroom separate entrance, Two car parking. (2) **Pickering** House & Basement Available. Whites Road& Taunton 3 bedroom house & 2 washroom.2 bedroon,1washroom, sep. entrance, 2 car parking. (3) **Markham** Basement - 2 bed room,1washroom, Kitchen sep. entrance. தொடர்புகளுக்கு: **647. 282.5782**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

**We are working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.**

உங்களது **rooms, house or basement**இனை சட்டரீதியாக **University / College Students** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee – 416.272.6811 / Hari – 647.262.8490**
**HomeLife Future Realty Inc. Brokerage**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## முதியோர் பராமரிப்பு

**Condo**வில் அறை மற்றும் உணவு கொடுத்து முதியோர் ஒருவரை வைத்து பராமரிப்பு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **416.271.1727**




## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820/647.868.2440**

## JOBS AVAILABLE

**COURTIES (5 mins. from Oshawa)**இல் அமைந்துள்ள **Anchor Point Fusion Bar and Grill**இற்கு **KITCHEN COOK**தேவை. Full time position. Also looking for a **HOUSE KEEPER** to do cooking & cleaning. 3 days per week & 5 hrs. a day. Prefer Monday, Wednesday & Friday 10am - 3pm. Will pay $1000 Cash per month - Permanent Job. அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்புகொள்ளவும்.

**416.618.6704**

## COMMERCIAL BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON (North West Corner , Scarborough)**

1000 sq. feet basement hall is for rent. $1100 per month including utilities. Good for having Music / Dance classes or any similar private classes or office space such as Tax Firm. Available immediately.

1000 சதுர அடி கொண்ட நில கீழ்அறை வாடகைக்கு உண்டு. ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**Please Call Kiruba at 416.828.5019**

## For your Special Occasions


**SHORT TERM RENTAL**

**TORONTO**

Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.

If Interested email :

georgeparan1@gmail.com





## யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்

சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

மேலும் பக்கங்கள் 12,13,15

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

கசப்பான உண்மைகளை வெளிப்படையாக சொன்னால் பல உறவுகள் பிரிந்துவிடுவதால் தான் இனிப்பான பொய்களை பல பேர் அழகாக சொல்லிக்கொண்டு இருக்கின்றனர்.

# STORE FOR LEASE

எந்தவிதமான வியாபாரங்களுக்கும் ஏற்ற இடம் விரும்பின் தற்போதுள்ள ஆடை அணிகலன்கள் விற்பனை நிலையத்தை இருப்புக்கள் (INVENTORY) தளபாடங்களுடன் எடுத்து நடத்தலாம்.

ANY TYPE OF RETAIL BUSINESS OR TAKE OVER EXISTING CLOTHING BUSINESS WITH THE INVENTORY AND FURNITURES / FIXTURES

LOCATED @ 2901 MARKHAM RD., UNIT # 5, SCARBOROUGH, ON

CONTACT : SULOSAN THANGARAJAH **(647) 865–0742**

CONTACT : KIRI **(416) 428.3333**

# JOBS AVAILABLE

Full time & part time jobs available at a busy Canadian Restaurant in Durham Region. Looking for **Front House Manager & Cook.** Immediate positions available.

தகுந்த சம்பளம் மற்றும் சலுகைகள் உண்டு.

## BOOK KEEPING JOB AVAILABLE

**LOOKING FOR AN OFFICE HELPER.**

Knowledge and Experience of Quick Books & Accounting is an asset.

Part time or Full time job available.

## HOUSE KEEPING JOB AVAILABLE

**9th LINE & 14th AVENUE**இல் அமைந்துள்ள வீடு ஒன்றில் பகுதி நேரம் வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை. Looking for a **HOUSE KEEPER to do Laundry, cooking & cleaning. Will pay $1000 Cash per month for part time.** Permanent Job. Full time also available.


Please call- KRIS: **647.802.7021**

Email: **restaurantjobhiring@gmail.com**

# NIRUTHAN NADARAJAH

*(Licenced Insurance Agent)*

## *Insurance Products & services offered*



**Insurance**

- Life Insurance
  - *Term*
  - *Whole Life*
  - *Universal Life*
- Accident & Sickness Insurance
  - *Medical*
  - *Disability*
  - *Critical Illness*
- Travel Insurance
  - *Visitors*
  - *Supper Visa*
  - *International Student*
- Group Insurance

**Investment**

- RESP
- RRSP
- TFSA
- Segregated Funds
- Annuity

## Part Time Job / பகுதி நேர வேலை வாய்ப்பு

நீங்களும் ஒரு பகுதி நேர அல்லது முழு நேர பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவராக பணிபுரிந்து சிறந்ததொரு வருமானத்தை ஈட்ட முடியும்

மாதம் $5000 முதல் $10,000 வரையிலான வருமானத்தை இலகுவாக ஈட்ட முடியும்

**What we offer...**

- Free Information
- Free Advice
- Free guidance
- Free Coaching
- Free Training
- Low Start up cost

**What you Achieve...**

- Financial Literacy
- Financial Security
- Financial Freedom
- Own Your Future

Contact
Niruthan Nadarajah (NR)
647-534-1819
nnadarajah2283fc@wfgmail.ca

*Secure yourself and your loved ones*

*What you need is what we do*

# COMMERCIAL / RESIDENTIAL FOR RENT

## Commercial space in Brampton Downtown

Street Exposure Near All Points Of Attractions. Great Place For Meetings, Network, Conferences And Etc. It Is Located Just Beside The Algoma University, Rose Theater, All Major Banks And Food Courts! At Grade With Queen Street East. The Rear Of The Building Is At Grade With Garden Square Pedestrian Promenade. Suitable For Professional Office As Well As Educational Institution Usages. Training Institutions Can Be Shared The Premises As Needed. 1000 to 7000 Sqfts are available . Rooms also available for Rent.

## Aslo another Commercial Space for Lease in Scarborough for Educational training purposes.

1500 Sqft. space available in Markham and Finch location with reception desk for training purposes.

## 8TH LINE & 14TH AVENUE HOUSE FOR RENT.

Fully Upgraded 4 bedroom & 3 washrooms Semi detached House ,hardwood Floor throughout Main Level. Well maintained And Move In Condition.

## 1 Bedroom + Den Condo for rent in Mississauga.

**Near to Square one**, 1050 Sqft., Luxury and elegance amenities. All utilities included, including Cable TV, 7 High Speed Internet. 2 Parking & 1 locker

**Please call: 416.918.9848 / 416.857.7603**

# wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

*Brampton* – Sandalwood Pkwy/Bramalea
(3Brm + 3Bath) [$3,199/m]

*Brampton* – Torbram/Peter Robertson - Bsmt
(2Brm + 1Bath) [$1,950/m]

*Toronto*– Lakesshore/Parklawn - Condo
(2Brm + 2Bath) [$3,250/m]

*Toronto* – Lesile/Steeles – Condo Townhouse
(4+11Brm + 3Bath) [$3,200/m]

*Toronto* – Yonge/Steeles Ave W – Semi-Detached
(4+Brm + 2Bath) [$2,700/m]

*Toronto* – Warden/Finch – Detached
(4+1Brm + 4Bath) [$4,000/m]

**Available for Rent**

*Oshawa* – Sincoe St/King St - Bungalow
(3Brm +1Bath) [$2,200/m]

*Whitby*– Dundas/Newmand Blvd - Bsmt
(2Brm+1Bath) [Call us]

*Whitby*– Dundas/Hwy 412 - Bsmt
32Brm+2Bath) [$1,850/m]

*Pickering*– Taunton Rd/Whites Rd - Townhouse
(4Brm +3Bath) [$3,100/m]

*Pickering*– Brock/Taunton – Condo Town House
(3+1Brm +3Bath) [$2,800/m]

*Ajax*– Salem Rd/Rossland Rd/Audley Rd – Detached
(4Brm +3Bath) [$3,900/m]

*Ajax*– Westney Rd/Ravencroft – Detached
(3Brm +2Bath) [$2,550/m]

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.**

கரு கந்தையா - 416.616.7278   Watson Property Management - 416.284.9999

**We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**

# ஹொறன்ரோவில் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

சுலோச்சனா அருண்

கனடா, மிஸிஸாகாவில் உள்ள ஜோன்போல் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற பீல் பிரதேச சொப்கா குடும்பமன்றத்தின் கலை நிகழ்வின்போது பிரபல எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் 'சாக்லாட் பெண்ணும்




பண்ணை வீடும்' என்ற தமிழில் எழுதப்பட்ட வெளிநாட்டுச் சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுப்பும், மாலினி அரவிந்தனின் 'பறவைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பும் சனிக்கிழமை 22-7-2023 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டன. கலை, இலக்கிய ஆர்வலர்கள் பலர் மண்டபம் நிறைந்த இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஐ. எம். எச். ஓ தலைவரும், வைத்திய கலாநிதியுமான வரகுணன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். முதலில் மங்கல விளக்கேற்றி, தமிழ்தாய் வாழ்த்து, கனடிய தேசியகீதம், அகவணக்கம் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து மன்றத்தின் மூத்த உறுப்பினர்கள் சிலரும், மாணவ



தன்னார்வத் தொண்டர் சிலரும் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து நடந்த நூல் வெளியீட்டு நிகழ்வின்போது செல்வி திவாணி நாராயணமூர்த்தி அவர்களால் நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. வெளிநாட்டுச் சிறுகதைகள் முதற்பிரதியைப் பட்டயக்கணக்காளர் திரு. ஆனந்தராசா அவர்களும் 'பறவைகள்' சிறுகதைத் தொகுப்பின் முதற்பிரதியைப் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி வரகுணனும் பெற்றுக் கொண்டனர். சிறப்புப் பிரதிகளை வைத்திய கலாநிதி மோகன், வைத்திய கலாநிதி பிரசாந்தன், திருமதி சத்தியவான், தனுசா இராஜதுரை ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து எழுத்தாளர் குரு அரவிந்தன் ஏற்புரை வழங்கினார்.

கனடாவில் பிறந்து வளர்ந்த சுமார் நாற்பது இளைய தலைமுறையினர் இந்த நிகழ்வின்போது, தமிழில் உரையாடிச்



சிறுவர் நாட்டிய நாடகம் ஒன்றை நடித்துக் காட்டி, நடனமாடி அனைவரின் பாராட்டையும் பெற்றுக்கொண்டனர்.

இதைவிட வீணை இசை, நடனம், பாடல்கள், பயனுள்ள உரைகள் போன்ற கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. மன்றத்தலைவர் யாழினி விஜயகுமாரின் உரையைத் தொடர்ந்து பிரதமவிருந்தினர் உரை இடம் பெற்றது.

இந்த நிகழ்வின்போது குரு அரவிந்தன் அவர்களின் நூல்கள் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டத்தினால்' விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த விற்பனையில் சேகரித்த பணம் முழுவதும் இலங்கையில் உள்ள தமிழ் உறவுகளின் சுகாதார, வைத்திய தேவைகளுக்காக ஐ.எம்.எச்.ஓ (International Medical Health Organization) நிறுவனத்தினரிடம் சொப்கா குடும்பமன்றத்தால் அன்பளிப் பாகக் கையளிக்கப்பட்டது. செயலாளரின் நன்றி உரையைத் தொடர்ந்து இரவு உணவு வழங்கப்பட்டு, நிகழ்வு சிறப்பாக முடிவுற்றது.




கூழாங்கற்களில் நடைபயிற்சி செய்வதால், காலில் உள்ள நரம்புப் புள்ளிகள் மூலம் சிறுநீரகம், நுரையீரல், கல்லீரல், முதுகெலும்பு, கண், காது உள்ளிட்ட அனைத்து உறுப்புகளும் தூண்டப்படுகின்றன. இதனால் அந்த உறுப்புகளின் செயல்பாடு சீராகி உடல் ஆரோக்கியம் பெறும்.



# ஓவியர் மாருதி என்ற இரங்கநாதன் மறைந்தார்




குரு அரவிந்தன்

மாருதி என்ற புனைப் பெயரைக் கொண்ட புகழ்பெற்ற ஓவியர் இரங்கநாதன் 27ஆம் திகதி யூலை மாதம் தனது 85ஆவது வயதில் பூனே நகரில் இதய நோயால் பாதிக்கப்பட்டு எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் புதுக் கோட்டையில் இவர் பிறந்தார். இவரது பெற்றோர்கள் மராத்திய குடும்பத் தைச் சேர்ந்தவர்கள். தஞ்சாவூரைச்



சேர்ந்த விமலா என்பவரைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு இரண்டு மகள்கள் இருக்கின்றனர். தீவிர இலக்கிய ஆர்வலர்கள் எப்படி ஓர் எழுத்தாளனின் படைப்பை நினைவில் வைத்திருப்பார் களோ, அதேபோல அந்தப் படைப்புக்கு உயிரூட்டிய ஓவியனையும் கட்டாயம் நினைவில் வைத்திருப்பார்கள்.

பிரபல இதழ்களுக்கு ஓவியம் வரைந்த மாருதியின் முதலாவது ஓவியம் குமுதம் இதழில் 1959ஆம் ஆண்டு வெளிவந்தது. மாணவப் பருவத்தில் தமிழக நூல்களை வாசிக்கும் பழக்கம் எனக்கு ஏற்பட்டதால், அதில் வரும் கதைகளுக்கு வரையப்படும் ஓவியங்களைப் பார்த்து நான் வியப்ப துண்டு. நானே ஒரு கதை எழுதி அதற்கு ஓவியர் மாருதி, ஓவியர் ஜெயராஜ் போன்றவர்கள் படம் வரைந்தால் எப்படி இருக்கும் என்று சில சமயங்களில் கற்பனை செய்து கனவுகூடக் கண்டிருக் கின்றேன். ஆனால் எதிர்பாராமல் அந்தக் கனவு ஒருநாள் நினைவாகிய போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.



விகடன் பவழவிழா கொண்டாட்டத்தின் போது, 'நீர்மூழ்கி நீரில் மூழ்கி' என்ற எனது குறுநாவல் தெரிவாகிப் பரிசு பெற்ற போது, ஓவியர் மாருதி, ஜெயராஜ், ராமு, அர்ஸ், பாண்டியன் ஆகிய ஐந்து ஓவியர் களும் அந்தக் கதைக்கு ஓவியம் வரைந்த தன் மூலம் என்னை ஆச்சரியப் படுத்தி யிருந்தனர். அப்பொழுது விகடன் ஆசிரிய ராக இருந்த வியெஸ்வி மூலம் தான் எனது கனவு நினைவானது, அதன்பின் அவர் மூலம்தான் எனக்கு ஓவியர் மாருதி யின் அறிமுகம் கிடைத்தது. ஆனந்த விகடனில் வெளிவந்த எனது கதைகளில் அனேகமான கதைகளுக்கு ஓவியர் மாருதியே ஓவியம் வரைந்திருந்தார். கற்பனைக் கதைகளில் வரும் பாத்திரங் களுக்கு உயிர் கொடுத்து, அந்தப் பாத்திரங்களை வாசகர்கள் மனதில் இடம் பிடிக்க வைத்ததில் ஓவியர்களுக்கும் முக்கிய பங்குண்டு என்றால் மிகையாகாது.

கதையில் வரும் பாத்திரங்களின் முக பாவனையை அப்படியே எடுத்துக் காட்டு




வதில் இவரது ஓவியங்கள் சிறப்பானவை. குறிப்பாகப் பெண் பாத்திரங்களை அப்படியே மனதில் நிலை நிறுத்தி விடக் கூடியது இவர் வரையும் பெண்களின் ஓவியங்கள். குறிப்பாக விகடனில் வெளி வந்த 'சார் ஐ லவ்யூ' என்ற எனது கதையின் இளம் கதாநாயகியையோ, நீர்மூழ்கி நீரில் மூழ்கி கதையில் வந்த கதாநாயகியையோ அல்லது ரோசக்காரி யில் வந்த சுபத்ரா என்ற பாத்திரத்தையோ மறக்க முடியாதவாறு ஓவியம் வரைந்திருந்தார். ரோசக்காரியில் தானே சுபத்ரா என்ற பாத்திரத்தோடு பூங்காவில் உட்காரந்து உரையாடுவது போல அவரது ஓவியம் வித்தியாமான கோணத்தில் அமைந்திருந்ததால் பலரின் பாராட்டையும் அப்போது பெற்றிருந்தார். 'பாட்டிற்கு இசை என்றால் கதைக்கு ஓவியம்!'




'ஓவியக் கலைமாமணி' என்ற விருது பெற்ற, ஓவியர் மாருதி உயிரூட்டிய எனது சில கதாபாத்திரங்களின் படங்களை இங்கே தருகின்றேன். நேற்றிருந்தார் இன்றில்லை என்பதற்கிணங்க, அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத் தினருடன் சேர்ந்து அவர்களது துயரத்தில் நாங்களும் கலந்து கொள்கின்றோம். ஓம் சாந்தி!

# அதிகாரம் காரமாகலாமா?



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

அதிகாரம் என்பது ஒரு நபர் பதவி அல்லது அலுவலகத்திற்குக் கட்டளை யிடும், உத்தரவுகளை பிறப்பிக்கும் உரிமையை வழங்கும் பண்பு. அதிகாரம் ஒழுங்குக்கான ஒரு நியாயத்தன்மை. வகிக்கும் பதவியாலோ, இருக்கும் நிலையாலோ முடிவுகளை எடுப்பதற்கும், ஆணைகளைப் பிறப்பிப்பதற்குமான உரிமை அதிகாரம். ஒரு நிறுவனத்தில் பணிகள் மற்றும் உற்பத்தி செயல் முறைகளை நிர்வகிக்கவும் அதிகாரம் தேவையானதாகும். அதிகாரங்கள் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளால் நிர்வகிக்கப்படுகிறது. அதன்படி அதன் ஒரு பகுதியாக இருக்கும் மக்கள்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான அதிகாரம் உள்ளது. அதிகாரம் என்பது ஒரு நபரின் உளவியல் நிலையை தவிர வேறில்லை. அதிகாரத்து வம் என்பது ஓர் அமைப்பின் செயற்பாட்டு நிர்வகிப்புக்கென இருக்கும் அமைப்பு ரீதியான கட்டமைப்பு, நடைமுறைகள், நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இவற்றின் சேர்க்கையாகும்.

பொதுவாக சமூகக் கட்டமைப்பில் ஒரு சிறு மக்கள் குழுவே பல துறைகளிலும் குவியப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்கும். பொறுப்புள்ளவருக்குத் தான் அதிகாரம் இருப்பது நல்லது. தார்மீக அதிகாரம் ஒரு நபர் தனது சொற்களுக்கும், செயல்களுக்கும், மதிப்புக்கும் இடையில் காண்பிக்கும் ஒத்திசைவின் மூலம் திணிக்கப்பட்ட ஒன்று என அழைக் கப்படுகிறது. எனவே தார்மீக அதிகாரம் நம் செயல் களிலிருந்து எழுகிறது. நாம் மற்றவர்களை நடத்தும்விதம். முடிவுகளை எடுப்பது மற்றும் செயற்படுவது போன்ற வற்றிலிருந்தும் எழுகிறது. எனவே அதிகாரத்தின் உண்மையான சக்தி தார்மீக அதிகாரத்தில் காணப்படுவதாகக் கருதப்படுகிறது.

முறையான அதிகாரம் என்பது ஒரு உயர்ந்த அல்லது மேலாளரிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்ட ஒன்றாகும். இது ஒரு பணியாளருக்கு கீழ்படிந்த தொழிலா லர்கள் மீது தனது நிலைப்பாட்டிற்கு ஏற்ப செலுத்துவதற்கான அதிகாரமாகும். நேரியல் அதிகாரம் என்பது உயர்ந்த-




கீழ்ப்படிந்த கட்டளையின் சங்கிலியை உருவாக்கும் ஒன்றாகும். செயல்பாட்டு அதிகாரம் என்பது ஒரு நிறுவனத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் செய்யும் செயல்பாட்டின் காரணமாக உள்ள அதிகாரம். தொழில்நுட்ப அதிகாரம் என்பது ஒரு நபர் தனது அனுபவம், திறன் ஆகியவற்றின் காரணமாகக் கொண்டிருப்பது. தனிப்பட்ட அதிகாரம் என்பது தார்மீக, சமூக அல்லது உளவியல்ரீதியான குணங்கள் காரணமாக மற்றவர்களைவிட ஒரு குறிப்பிட்ட உயர்வு உள்ளவர்களிடம் காணப்படும் அதிகாரம். வீட்டோ அதிகாரம் என்பதன் பொருள் தடைசெய்தல் ஆகும். இது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு அளிக்கப் பட்டுள்ள சிறப்பு உரிமை ஆகும். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நிரந்தர உறுப்பு நாடுகள் பிற நாடுகளால் ஐக்கிய நாடுகள் ஸ்த்தாபனத்தில் கொண்டுவரப் படும் தீர்மானங்களை நீக்க முடியும்.

அதிகாரம் பல்வேறு கூறுகளிலிருந்து கட்டப்பட்டுள்ளது. ஒரு விதியாக மிக முக்கியமான இரண்டு கூறுகள் வேறுபடு கின்றன. சில செயல் களைச் செய்வதற் கான திறனைப்பற்றிய விழிப்புணர்வு, அத்துடன் ஒருவரின் திறனைப்பற்றிய விழிப்புணர்வு. பிந்தியது பெறப்பட்ட சலுகைகள், சிறப்புரிமைகள் மற்றும் பலவற்றின் வணிகத்தில் பயன்படுத்துவ தாகும். அதிகாரம் என்பது மற்றவர் களுடன் தொடர்பு கொள்ளும்போது தோன்றும். நீங்கள் அதை வெல்ல வேண்டும். பின்னர் நீங்கள் அதற்கு தகுதியானவர் என்பதை தொடர்ந்து நிரூபிக்க வேண்டும். தலைவரின் அதிகாரம் என்பது இரண்டு கூறுகளாகப்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

# அன்னைத் தமிழ்த் திருத்தசாங்கம்

**காப்பு**
அன்னைத் தமிழ்காக்கும் ஐங்கரன் அப்பனவன்
என்னைத் திருத்தசாங்கம் செய்யவைத்தான்- உன்னதமாய்க்
காக்க சுரேஜமீ கற்றிடும் யாவரையும்
காக்கும் தமிழால் கசிந்து!

**நாமம்**
பார்போற்றும் குக்கூவே பைந்தமிழில் கூவிடுக
ஏர்போற்றும் எம்மினத்தின் ஏற்றதமிழ்! - தேரேற்றி
ஊர்போற்றி உய்யொளி போற்றி உரக்கச்சொல்
வேர்போற்றன் னைத்தமிழ் என்று!

**நாடு**
இன்பக் குரலாயோய் இன்னிசைப் பாட்டாயோய்
நன்று நவில்வாயோய் நாடிது - மன்னுபுகழ்
கொண்ட இமயம் தொடர்ந்து குமரிவரை
வண்டமிழ் நாடென வாழ்த்து!

**நகர்**
இசைக்குயில் ஈர்க்கின்ற எம்மூர் தெரிவாய்
திசைக்கொரு எல்லை இருக்கும் - விசைதரு
சொக்கனுடன் மீனாள் சுகங்கொள் மதுரையென
திக்கெலாம் சொல்லித் திரி.

**ஆறு**
அக்காலம் தொட்டிங்(கு) அரும்பயிர் சார்ந்திருக்கும்
இக்காலும் வேண்டுகின்ற இவ்வாறு - சிக்கல்
மிகக்கொண்ட காவிரி யேயெனக் கூவு
மிகநன்றா யெங்கு மினி!

**மலை**
வாசனை மிக்கும் வனப்போ டுயர்ந்தமலை
நேசன் அகத்தியன் நின்றமலை - ஈசன்
புகழ்த்தமிழ் வார்த்த பொதிகை இதுவே
உகப்புக் குயிலே உரை!

**ஊர்தி**
உயிரோடு ஒட்டி உறவாடும் காற்றே
உயிரின் நிலைக்கிவ் வுலகில் - உயிர்கொடு
காற்றே தமிழுக்குக் காவல் ஊர்தியெனச்
சாற்று நிலத்தில் சமைத்து!

**படை**
சங்கம் முதலாய்ச் சமீபம் வரைத்தமிழ்
தங்கம் பதித்த தகையோரே - உங்களால்
நாங்கள் நிமிர்கிறோம் நாளும் புலவர்காள்
நீங்கள் எமக்குப் படை!

**முரசு**
தென்கடல் மூழ்கியெங்கள் தெம்பினைக் காட்டிடும்
நன்றென நாமெடுத்த நற்சங்கே - இன்னிசை
ஓங்கி நிலத்தில் ஒலித்திடுக எம்முரசாய்
பாங்காய் எவர்க்கும் பரந்து!

**தார்**
அல்லிமலர் கொள்நீர் அருந்த இனிப்பாகும்
வெல்லும் மனதை இயல்பாகச் - சொல்கநிதம்
அன்னையவட் கேற்றதார் அல்லியென நற்குயிலே
இன்னைக்குப் பாட இசைந்து.

**கொடி**
கானக் கருங்குயிலே காணா வனப்பழகே
கானம் இசைத்துக் கவிபாடு! - மானமுடைப்
பாண்டியனின் மீன்கொடி பைந்தமிழ்ச் சங்கமெலாம்
தாண்டிவந்த எங்கள் கொடி!

**நூற்பயன்**
உயர்ந்த நெறிகொண்ட உத்தமர்காள் சொல்க
உயரத் திருத்தசாங்கம்! உண்மை! - உயர்வீர்
உயரம் தொடுப்பின் ஊருக்குச் சொல்க
உயரட்டும் மக்கள் உணர்ந்து!

இதுகாறும் கிளி பேசுவதாக அமைந்த தசாங்கத்தைக் குயில் பாடுவதாக அமைத்துள்ளேன்.

சுரேஜமீ



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


# அதிகாரம்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரிக்கக்கூடிய ஒன்று. முதலாவது தனிநபரின் அதிகாரம். மற்றயது பதவியின் அதிகாரம். கூடுதல் முயற்சி இல்லாமல் மக்களை நிர்வகிக்க அதிகாரம் உங்களை அனுமதிக்கிறது. ஏன்? காரணம், அதிகாரம் உள்ள ஒருவருக்கு எல்லோரும் கீழ்ப்படிகின்றனர். எல்லோரும் அவரது கட்டளைகளை பின்பற்றுவதில் மகிழ்ச்சி அடைகின்றனர். மேலும் நிபந்தனைகளும், கருத்துக்களும் முற்றிலும் நியாயப்படுத்தப்படுகின்றன. எல்லாம் தெளிவாக இருக்க வேண்டுமா? தனது அதிகாரத்தை உணரும் மேலாளரை நியமிக்க வேண்டும். எல்லாம் சுமூகமாக நடக்கும். இல்லையேல் அதிகாரம் காரமாகத்தான் இருக்கும்.

மரபு வழியாக அதிகாரத்துவம் கொள்கையை உருவாக்குவதில்லை. மாறாக அதனை செயல்படுத்துகிறது. சட்டம், கொள்கை மற்றும் கட்டுப்பாடுகள் பொதுவாக ஒரு தலைமையில் இருந்து உருவாகிறது. அவற்றை அமல்படுத்த அதிகாரத்துவத்தை அது உருவாக்குகிறது. வாழ்வை நேசிப்போர் அதிகாரத்தைத் தேய்வின்றிப் பயன் படுத்துவர். அதிகாரத்தைத் தீய செயல்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. தீய செயல்களால் எப்போதும் கெடுதல் தான் ஏற்படும். அதனால் நெருப்பைவிட தீயசெயல்கள் தீங்கானது. அப்படிச் செய்ய நினைத்தால் அறமே உனக்கு தீங்கு விளைவிக்கும். அத்துடன் உன்னிடம் இருக்கும் அனைத்தும் விலகிப்போய் நீயே ஏதும் இல்லாதவனாகி விடுவாய். ஒருவரை அவருடைய நிழல் தொடர்வதைப்போல் அவர் செய்த கேடும் அவரைத் தொடர்ந்துவந்து துன்பம் தரும். எனவே அதிகாரத்தை யாராக இருந்தாலும் துஷ்பிரயோகமின்றிப் பயன்படுத்த வேண்டும்.

மட்டம்தட்ட நினைக்கும் அதிகாரம் கொண்டவர்களைக் கண்டுகொள்ளக் கூடாது. அவர்கள் உங்களை வெறுப்பேற்ற எடுக்கும் முயற்சிகள் நீங்கள் வெறுப்படையவில்லை எனில் நாளடைவில் அவ்வாறான முயற்சிகள் குறையும். உங்கள் வேலையில் மட்டும் சரியாக இருங்கள். அதிகாரத்தை ஏற்கத்தக் கவகையில் கையாளத் தெரிந்தோர் செய்யலாம். அதிகாரத்தால் எங்கெல்லாம் சிக்கல்கள் வராதோ அங்கே பிரயோகிக்கலாம். அதிகாரத்தை ஏற்றே ஆகவேண்டிய நிலையில் உள்ளவர்கள் உட்பட்டு நடப்பது நலம். அதிகாரத்தைக் காரமாகச் செய்வதால் நன்மை ஏதும் இல்லை. தீமைகளால் அதிகாரம் செய்யும் உரிமை பறி போகலாம். அதிகாரம் என்பது மிகச் சுருக்கமான ஒன்று. ஏதையாவது தரத்தில் அளவிடுவது மிகவும் கடினம். பொற்றோர், தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் பலரின் அதிகாரம் முதன்மையாக வழிநடத்தப்பட வேண்டிய நபரின் ஆளுமைப் பண்புகளை மதிக்க வேண்டும். மரியாதை இல்லை, அதிகாரம் இல்லை. இந்த உண்மையை அங்கீகரிக்க வேண்டும்.

அதிகாரத்தால் நன்மை வரவேண்டுமே தவிர தீமைகள் வரக்கூடாது என்பதில் கணவன்-மனைவிகூட அவதானமாக இருக்க வேண்டும். அதிகாரத்தால் சீரழிந்த குடும்பங்கள் பல. எதுவும்




அளவுக்கு மீறினால் நஞ்சுதான். அதிகாரத்தைக் காரமற்றதாக்கி எல்லோருடனும் நன்றாகப் பழகுங்கள். எல்லோருக்கும் உதவுங்கள். உதவுகிறோம் என்ற நினைப்பு இல்லாமல் உதவுவதே ஆனந்தம். அது இந்த வானத்தையும், பூமியையும்விட மிகப் பெரியது. அதிகாரப் பிரயோகம் அடி நாக்கிலே நஞ்சும், நுனி நாக்கிலே அமுதமும் கொண்டதாக இருக்கக்கூடாது. "அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபம்" என்கிறது பழமொழி. எனவே அதிகாரத்திலே காரத்தை சேர்க்கக்கூடாது. ஆதிக்கம், அதிகாரம் என்பது மருந்து போலத்தான். அளவாக இருந்தால் நன்மை செய்யும். அளவுக்கு மீறினால் தீமை செய்யும்.

பாசம் இருக்கும் இடத்தில் அதிகாரம் இருப்பதில்லை என்பர். அதிகாரம் இருக்கும் இடத்தில் அன்பு நிலைப்பதில்லை. அதிகாரம் செய்யும் இடத்தில் இருந்தாலும் அன்பாய் பேசுங்கள், அன்பாய் இருங்கள். யாருக்கும் எதுவும் நிரந்தரம் இல்லை. அதிகாரத்தை சத்தமாக நிறைவேற்ற வேண்டியதல்ல. சிலரின் அதிகார வரம்புக்குள் சிக்கி சீரழிகிறது கட்டுப்பாட்டில் இல்லாத மனம். அதிகாரத்தின் காரத்தால் சுயமரியாதையை இழந்தவர்கள் பலர். சுயமரியாதையை இழந்துதான் வாழவேண்டும் என்றால் அந்த வாழ்க்கை தேவைதானா? அதிகாரத்தின் காரத்தை தூர விலக்கி அதிகாரத்தை சுமுகமாகப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பயன்படுத்துவோரும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழவைப்போமாக.

